விலை:20 ரூபா

KANDY HOMES & CONSTRUCTIONS



நவீன வடி வமைப்புக்களில் உங்களது விருப்பத்திற் கேற்ப வீட் டினை வாஸ்து சாஸ்திர முறைப்படி அமைத்துத் தருகிறோம்.

81, பலாலி வீதி, இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம்.

KHC 0777 462889/0777 463469
021 791 7623

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 02, செவ்வாய்க்கிழமை 18.07.2017 கதிர் 254

# ஐ.தே.க. - ஸ்ரீ.ல.சு.க. கூட்டு அரசு தவிர்க்கவே முடியாதது!

## பிரதமர் ரணில் விளக்கம்



கொழும்பு, ஜூலை 18
"ஐ.தே. கட்சி மற்றும் ஸ்ரீ.ல. சு.கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து கூட்டு அரசாகப் பணியாற்றுவது மிகக் கஷ்டமான காரியம். எனினும் நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அப்படி இணைந்து செயலாற்றுவது தவிர்க்க முடியாதது."
- இவ்வாறு தெரிவிக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

பக்கம் 18

## சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் பாலகிருஷ்ணன் நாளை யாழ். வருகை



யாழ்ப்பாணம், ஜூலை 18
இலங்கைக்கு வருகை தந்துள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணன் நாளை யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்வார்.
நேற்றிரவு அவர் கொழும்பை வந்தடைந்திருந்தார். இன்று

பக்கம் 18

## மயிலிட்டி எஞ்சிய பகுதியை விடுவிக்க வலியுறுத்துகிறார் அமைச்சர் விஜயகலா

### யாழ். படைகளிடம் தளபதியுடன் நேற்றுப் பேச்சு



யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு மயிலிட்டித் துறைமுகத்திற்கு உட்பட்ட – பொது மக்களுக்கு சொந்தமான – எஞ்சிய காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக யாழ். படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

பக்கம் 18

## ஆஸி.வெளிவிவகார அமைச்சர் இவ்வாரம் இலங்கை வருகிறார்

ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் ரவி

பக்கம் 18

## மாகாண அமைச்சர் பதவிக்கு ரெலோ சார்பில் விந்தன்?

### சிவாஜி அணி கொதிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 18
தமது கட்சியின் சார்பில் வடக்கு மாகாண சபை அமைச்சராக நியமிக்கப்பட்ட பா.டெனீஸ்வரனை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு கோரியுள்ள தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அவரின் இடத்துக்கு மாகாண சபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தனை சிபாரிசு செய்வது குறித்துத் தீர்க்கமாக ஆராய்ந்து வருகின்றது.

பக்கம் 18

## அரசமைப்பு வழிகாட்டல் குழு வியாழனன்று மீண்டும் கூடுகிறது

கொழும்பு, ஜூலை 18
கடந்த வாரம் செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற விருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்ட அரசமைப்புப் பேரவையின் வழிகாட்டல் குழுவின் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்

பக்கம் 18

## ஊர்காவற்றுறை கர்ப்பிணித்தாய் படுகொலை: பிறிதொரு சந்தேக நபரிடமும் விசாரணையாம்!

யாழ்ப்பாணம்ஊர்காவற்றுறையில் இளம் கர்ப்பிணித் தாயொருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் மூன்றாவது சந்தேகநபர் ஒருவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளனஎனப்பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.
ஊர்காவற்றுறை நீதி

பக்கம் 18

## அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கிடையே ஒற்றுமை இன்மையால் அபிவிருத்தி பாதிப்பு

### விசனம் வெளியிட்டார் வடக்கு முதல்வர்



யாழ்ப்பாணம், ஜூலை 18
'எம்மிடையே ஒரு பாரிய குறைபாடு உண்டு. ஒருவருடன் இன்னொருவர் இயைந்து போகின்ற தன்மை அறவே இல்லை. கூட்டாகச் சேர்ந்து செயற்படுகின்ற தன்மையும் இல்லை. குறை காண்பதில் நாங்கள் வல்லவர்கள். இதனால் பல அபிவிருத்திப் பணிகள் நடை முறைப்படுத்தப்பட முடியாமல் தடங்கல் நிலையில் உள்ளன'
–இவ்வாறுவிசனம்வெளியிட்

பக்கம் 18

## சாட்சியமளிக்க நீதிமன்றுக்கு வருமாறு ஜனாதிபதி,பிரதமருக்கு அழைப்பாணை

### திஸ்ஸ அத்த நாயக்காவுக்கு எதிரான வழக்கில்





திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிரான வழக்கில் சாட்சியமளிப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரை எதிர்வரும் டிசெம்பர் 4 ஆம் திகதிநீதிமன்றத்தில்முன்

பக்கம் 18

## உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தத் தயாராகின்றது அரசு

### உரிய சட்டமூலம் அடுத்த வாரம் சமர்ப்பிப்பு என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை,18
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.இந்த ஒழுங்கு விதிகளை நிறைவேற்றுவதற்காக அது தொடர்பான சட்ட வரைவு அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென ஜனாதிபதி தெரிவித்தார்.
கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு ஒழிப்புக்கான உள்ளூராட்சி நிறுவன திட்டத்தை தயாரிப்பதற்காக நேற்று கொழும்பு இலங்கை மன்றத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பக்கம் 18

## அரசு விசாரணை செய்யத் தவறினால் ஐ.நாவே நேரில் இறங்கும் நிலை வரும்

### எச்சரிக்கின்றார் ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை



மன்னார், ஜூலை 18
இலங்கையில் காணாமலாக்கப்பட்டோர் மற்றும் கடத்தப்பட்டவர்கள் குறித்து இலங்கை அரசு மறந்து போனாலும் ஐ.நாவில் உள்ளோரும் அதிகாரிகளும் மறந்துபோகவில்லை. அவர்கள் அளவுக்கு மிஞ்சி அமைதி காக்கமாட்டார்கள். சந்தர்ப்பம் வரும் போது அவர்களே நேரடியாக

பக்கம் 03

## இழுபறிப்படும் உள்ளூராட்சித் தேர்தல்; பொறுமையின் எல்லையில் எதிரணி!


### வாசுதேவ நாணயக்கார காட்டம்



கொழும்பு, ஜூலை,18
உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை அரசாங்கம் கால வரையறையின்றி பிற்போட்டுவருகின்ற நிலையில் அதனைப் பொறுத்துக் கொள்வதற்கும் ஓர் எல்லையுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.
நேற்றுக் கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலா

பக்கம் 18

அளப்பு அருணாசலம்



கூட்டுக் குழும்பினால் நாட்டுக்கும் கேடு...!

## தலைக்கவசத்தால் இளைஞர் தாக்கியதில் வயோதிபர் மரணம்

### வவுனியா நேரியகுளத்தில் சம்பவம்

வவுனியா, ஜூலை 18
வவுனியாவில் நேற்று முன்தினம்இரவு9.45மணியளவில் இளைஞர் ஒருவர் வயோதிபர் மீது தாக்குதல் நடத்தியதில் வயோதிபர் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.
இது தொடர்பாக மேலும் தெரிய வருபவை வருமாறு:–
ஞாயிற்றுக்கிழமை வவுனியா நேரியகுளம் பகுதியில் வயோதிபருக்கும் இளைஞர் ஒருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு இறுதியில்

பக்கம் 18

# வவுனியா நகரில் நேற்று ஆடிப் பிறப்பு நிகழ்வுகள்





ஆடிக்கூழ், கொளுக்கட்டையும் பரிமாறப்பட்டன

வவுனியா, ஜூலை 18

வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் வவுனியா தர்மலிங்கம் வீதியிலுள்ள சோமசுந்தரப்புலவர் நினைவுச்சிலையடியில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டன.

இந்தநிகழ்வில் சோம சுந்தரப்புலவரின் நினைவுரையை தமிழ்மணி அகளங்கள் நிகழ்த்தினார். வவுனியா விபுலானந்தக் கல்லூரி மாணவர்கள், ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை பாடலைப் பாடினர். சோம சுந்தரப்புலவரின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர். ஆடிப்பிறப்பை முன்னிட்டு ஆடிக்கூழ், கொளுக்கட்டை என்பனவும் பரிமாறப்பட்டன.

இந்நிகழ்வுக்கு பிரதான அனுசரணையை ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ். ரவீந்திரன், நகர வரியிறுப்பாளர் சங்கத் தலைவரும் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவருமான எஸ். சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், ஆர். கதிர்காமராஜா ஆகியோர் வழங்கினர்

நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.பி. றோஹன புஸ்பகுமார, மேலதிக அரச அதிபர் த. திரேஸ்குமார், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன், பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபன், முன்னாள் நகர உபபிதா சந்திரகுலசிங்கம், மாவட்ட செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-100)

# வவுனியாவில் மாடு கடத்தல் முயற்சி நெளுக்குள பொலிஸாரால் முறியடிப்பு



வவுனியா, ஜூலை 18

செட்டிகுளத்திலிருந்து வவுனியாவுக்கு கொண்டு செல்ல இருந்த மாடும் வாகனமும் நேற்றுக்காலை நெளுக்குளம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

நெளுக்குளம் பாடசாலைக்கு முன்பாக நேற்றுக் காலை 6.30 மணியளவில் மகேந்திரா வாகனத்தை மறித்து பொலிஸார் சோதனையிட்டனர். அதன்போது சட்ட விரோதமான முறையில் மாடு கொண்டு செல்லப்படுகின்றமையை அவர்கள் கண்டறிந்தனர். போக்குவரத்து ஆவணங்கள், மாடுகள் பெறப்பட்ட உரிமையாளர்களின் ஆவணங்கள் எவையும் அவர்கள் வசம் இருக்கவில்லை. எதுவித ஆவணங்களும் இன்மையால் மாடு சட்ட விரோதமாகவே கடத்தப்படுகின்றது என்பதை பொலிஸார் உணர்ந்து கொண்டனர்.

மாடு, மகேந்திரா வாகனம் ஆகியவற்றோடு வாகனச்சாரதியையும், உதவியாளரையும் பொலிஸார் கைது செய்தனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் அந்த இருநபர்களையும் நீதிவான் முன் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-100)

# சமுர்த்திப் பயனாளிகளாகத் தெரிவாகி நிராகரிக்கப்பட்டோர் நேற்று கவனவீர்ப்பு!

## கரைச்சி பிரதேச செயலகம் முன்பாக



கிளிநொச்சி - கரைச்சி பிரதேச சமுர்த்தி பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கரைச்சி பிரதேச செயலகம் முன்பாக இடம் பெற்றது.

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி பயனாளிகளாக தெரிவுசெய்யப்பட்டு பின்னர் பல்வேறு காரணங்களால் தாம் நிராகரிக்கப்பட்டனர் எனத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

இதன்போது கரைச்சி பிரதேச செயலாளர், போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடினார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு தொடர்பான முடிவுகள் என்னால் எடுக்கப்பட்டவை அல்ல. இதில் உள்ள குறைபாடுகளை மீள்பரிசீலனை செய்வதற்கு குழு ஒன்று உள்ளது. அது உங்கள் கிராமத்துக்கு வருகைதரும் போது இது தொடர்பில் நீங்கள் தெரிவிக்கலாம் என்று கூறினார். அதனைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆலய உற்சவங்கள்

தெல்லிப்பழை, ஜூலை 18

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் ஆடிக்கார்த்திகை பெருவிழாநாளைபுதன்கிழமை காலை 5 மணிக்கு அதிகாலை வழிபாட்டுடன் ஆரம்பமாகி நடைபெறும். சிறப்பு மேளக் கச்சேரியும் வாணவேடிக்கைகளும் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★★★

நீர்வேலி, ஜூலை 18

நீர்வேலி தெற்கு - மனோன்மணி அம்மன் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஆடிச் செவ்வாய் வழிபாடு இடம் பெறும். முற்பகல் 11 மணிக்கு சிறப்பு முழுக்கு வழிபாடுகள் இடம் பெற்றுத் தொடர்ந்து தீப வழிபாடு நடைபெறும்.

## கஷ்டப் பிரதேசத்தில் பணிபுரிந்த ஆசிரியருக்கு நாவலர் விருது

யாழ்ப்பாணம், ஜூலை 18


வடமாகாணத்தில் கஷ்டப் பிரதேசத்தில் ஆசிரியர் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு 'ஆறுமுகநாவலர் விருது' வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தில் 15 வருடங்களுக்கு மேல் கஷ்டப் பிரதேசத்தில் ஆசிரியப் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் நாளை மறுதினம் 20 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் தமது சேவைக்காலத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறு யாழ். வை.எம்.சீ.ஏ. கோரியுள்ளது. தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு ஆறுமுகநாவலர் விருதும் பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விண்ணப்பங்களை வை.எம்.சீ.ஏ. இல.109, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கோ அல்லது Jaffnayamla.com எனும் மின்னஞ்சலுக்கோ அனுப்புமாறு வை.எம்.சீ.ஏ.யின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# இலங்கை கடற்படையிடம் கையளிக்கவுள்ள மிகப் பெரிய ஆழ்கடல் ரோந்துக் கப்பல்!



இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பல் எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இலங்கைக் கடற் படைக்கு மிகப்பெரிய இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை ஆயிரம் கோடி ரூபா செலவில் கட்டுவதற் கான உடன்பாடு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்டது.

இதற்கமைய கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட முதலாவது கப்பல் எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கைக் கடற்படையிடம் அதிகாரபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது.

105 மீற்றர் நீளமான- 2 ஆயிரத்து 400 எடை கொண்ட இந்தப் போர்க் கப்பல், இலங்கைக் கடற்படையால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'இலங்கைக் கடற்படையால் பயன்படுத்தப்படும் மிகப் பெரிய போர்க்கப்பலாக இது இருக்கும். இந்திய கப்பல் கட்டும் தளத்தால் ஏற்றுமதி செய்யப்படும் மிகப் பெரிய போர்க்கப்பலாகவும் இது இருக்கும். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடற்படை உறவுகளை இது மேலும் ஆழமாக்கும் என்று இந்திய கடற்படை அதிகாரி றியர் அட் மிரல் சேகர் மிட்டல் தெரிவித்தார்.

திட்டமிடப்பட்டதை விட மூன்று மாதங்கள் முன்னதாகவே, இந்தக் கப்பல் இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இரண்டாவது கப்பல் 2018 பெப்ரவரியில் - திட்டமிடப்பட்டதற்கு 3 மாதங்கள் முன் கூட்டியே ஒப்படைக்கப்படும்.

இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள், கப்பல்களுக்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகள், கடல்சார் கண்காணிப்பு, ஆழ்கடல் நிலைகளின் பாதுகாப்பு, மற்றும் அதிக பெறுமானம் கொண்ட கப்பல்களின் பாதுகாப்பு எனப் பல்வேறு பங்குகளை ஆற்றக் கூடியவை.

25 கடல் மைல் வேகத்தில் பயணிக்கக் கூடிய இந்தக் கப்பல்களில், ஒரு ஹெலிக்கொப்டர் தரித்திருப்பதற்கான வசதிகளும் உள்ளன.

# தீவகத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடு; மக்கள் இடம்பெயரக்கூடிய நிலை

## யாழ்.மாவட்டச் செயலகக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு



(எஸ்.நிதர்ஷன்)

தற்போதைய வறட்சி தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில் தீவகப்பிரதேசங்களைச்சேர்ந்த மக்கள் குடிதண்ணீர் இன்றி இடம்பெயரக்கூடிய அவல நிலை ஏற்படும் என தீவகத்தின் பிரதேச செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தீவக மக்கள் தற்போது குடிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்குமான நீரைப் பெறுவதற்கு பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

யாழ்.மாவட்டச்செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர்கள் இவ்வாறு கூறினர்.

பொதுமக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர்கிடைப்பதை உறுதிப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், நீர்வளச் சபை அதிகாரிகள், ஏனைய துறைசார் அதிகாரிகள் போன்றோர் பங்குபற்றினர்.

மேற்படிக் கலந்துரையாடலில், குடிதண்ணீர் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீரைப் பெறுவதில் மக்கள் எதிர்நோக்கும்சிரமங்கள்தொடர்பாக ஆராயப்பட்டன.

இதன்போது தீவகத்தில், வேலணை, ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பிரதேச செயலாளர்கள் தமது பிரதேசங்களில் குடிதண்ணீருக்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை பிரதேசத்திலுள்ள நன்னீர்க் கிணறுகளில் நீர் இல்லை. இதனால் மக்கள் அவல நிலையை எதிர்நோக்கியுள்ளனர். இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் மக்கள் இடம்பெயரக்கூடிய அபாயம் ஏற்படும் என, ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி எழிலரசிஅன்ரன்யோகநாயகம் தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நாம் உரையாடுகின்றபோது குடிதண்ணீர்ப் பிரச்சினையையே அவர்கள் முதன்மைப்படுத்துகின்றனர் எனவும் அவர் கூறினார். மக்களுக்கு உடனடியாக நீர்விநியோகிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இதேபோன்றே தமது பிரதேசங்களிலும் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என வேலணைப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன், காரைநகர்பிரதேசசெயலாளர் ஈ.தயாரூபன் ஆகியோரும் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் கருத்து தெரிவித்தயாழ்.அரசஅதிபர்நா.வேதநாயகன், மக்களுக்கு சுத்தமான நீரை வழங்குவதற்கு புதிய திட்டங்களை வகுத்து அதன்படி செயற்பட வேண்டும் என்றார். மக்களுக்கு நீர் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்போது அதற்குஎதிர்ப்புக்கள்கிளம்புவது தொடர்பாகவும் அரச அதிபர் கவலைகளை வெளிப்படுத்தினார்.

கிருமிநாசினிகள், உரப் பயன்பாடு போன்றவற்றால் யாழ்.குடாநாட்டுநீர் மாசடைந்து வருவதாகக் கூறிய அவர், சுத்தமான குடிதண்ணீரைப் பெறுவது எதிர்காலத்தில் பாரிய சவாலாக அமையப்போகின்றது என்றார்.

இதுதொடர்பாக வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் திட்டங்களை வகுத்துச் செயற்படுவோம் எனவும் அவர் கூறினார். (ம)

# பட்டதாரிகள் 27 பேருக்கு நேற்று ஆசிரியர் நியமனம்

(எஸ்.நிதர்ஷன்)



வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நேற்று பட்டதாரிகள் 27 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

கணிதம், விஞ்ஞானம், தொழிநுட்ப பாடங்களுக்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலகத்தில் வைத்து ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இன்று முதல் அவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# யாழில் நேற்றிரவு கொள்ளையர் பணம் பறிப்பு, தாலி அறுப்பு

## சிவப்பு ஓட்டோவில் வந்து கைவரிசை

யாழ்ப்பாணம், ஜுலை 18

யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு இரு இடங்களில் வழிப்பறிக் கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன என யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நகரில் தொழில் முடித்து திரும்பிய இளைஞன் ஒருவரிடம் பணம் பறித்துச் செல்லப்பட்ட அதேவேளை, பெண்ணொருவரின் தாலிக்கொடியும் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

யாழ்.நகரில், நடைபாதைக் கடையில் ஆடைகள் வியாபாரம் செய்யும் இளைஞன் ஒருவர் தனது பணி முடிந்து நேற்றிரவு 9.00 மணியளவில் துவிச்சக்கர வண்டியில் வீடுதிரும்பிக்கொண்டிருந்தார்.

தாம் பிறவுண் வீதியில், நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் சென்றுகொண்டிருந்தபோது Q-2023 என்ற இலக்க முடைய சிவப்பு நிற ஓட்டோ ஒன்றில் வந்த சிலர், தமது கழுத்தைப் பிடித்து நசித்து அச்சுறுத்தி தம்மிடம் இருந்த 25 ஆயிரம் ரூபா பணத்தைப் பறித்துக்கொண்டு தப்பிச்சென்றனர் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கச்சேரி – நல்லூர் வீதியில், மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அண்மையில் வைத்து நேற்றிரவு 9.15 மணியளவில் பெண்ணொருவரின் ஐந்து பவுண் தாலிக்கொடி அறுத்துச் செல்லப்பட்டது. ஓட்டோ ஒன்றில் வந்தவர்களே தாலிக்கொடியை அறுத்துச் சென்றனர் என அப்பெண் தெரிவித்தார்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீள இயங்கவைக்க சிங்கப்பூர் உதவ வேண்டும்

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நாளை புதன்கிழமை சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விஜயம் செய்யும் நிலையில், வட பகுதி மக்களின் சுவாச வைத்தியசாலையாக அமைந்த மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீளவும் செயற்படுத்த சிங்கப்பூர் அரசு உதவ வேண்டும் எனக் கோர விரும்புகின்றோம்.

பிரித்தானியாவின் ஜோஜ் மன்னரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வைத்தியசாலை 1990ஆம் ஆண்டுவரை செயற்பட்டு வந்தது. பின்னர் அது இராணுவத் தளமாக மாற்றப்பட்டுவிட்டது. தற்போது இப்பிரதேசம் மீளக் குடியேறுவதற்கான பகுதியாக விடுவிக்கப்பட்டுஉள்ளது. எனவே யாழ். அரசாங்க அதிபர் இந்த வைத்தியசாலையை மீள அமைப்பதற்கான உதவியைக் கோருவதற்கு முதன்மை கொடுக்க வேண்டும்.

ஏனெனில் யாழ். போதனா வைத்தியசாலையில் சுவாச நோயாளிகளுக்கான தனிப்பட்ட விடுதி வசதி இல்லை. யாழ். குடாநாட்டில் வருடம் தோறும் 300 காச நோயாளிகளும் வட மாகாணத்தில் வருடம் தோறும் மொத்தமாக சுமார் 1000 காச நோயாளிகளும் இனங்காணப்படுகின்றனர். யாழ். மாவட்டத்தில் சுமார் 75,000 அஸ்மா நோயாளிகள் உள்ளனர். இவை தவிர, யுத்தக் குண்டு வீச்சுக் களால் வடமாகாணத்தில் சுமார் 3 லட்சம் பேர் சுவாசப்பாதிப்புகளுடன் நாள்பட்ட நோய் நிலையுடன் உள்ளனர். எனவே வடபகுதி மக்களின் நெடுநாளைய சுவாச நலனை முன்னிட்டு வடபகுதியில் முன்னர் அமைந்திருந்த சுவாச வைத்தியசாலையான மயிலிட்டி வைத்தியசாலையை மீளவும் அமைக்க முயற்சிகள் எடுக்கப்படல் வேண்டும்.

– மருத்துவர் சி.யமுனாநந்தா

★ *சிரேஷ்ட வைத்திய அதிகாரி, வெளிநோயாளர் பிரிவு, யாழ். போதனா வைத்தியசாலை.*

★ *இணைத் தலைவர், வட இலங்கைக்காசநோய்த்தடுப்புச்சங்கம்.*

★ *முன்னாள் யாழ். மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி.*

## அரசு விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு இறங்கும் கட்டம் வரும். ஐ.நா. அதிகாரிகளே வந்து யுத்தக் குற்றச்சாட்டுக் குறித்து ஆராயும் சூழ்நிலை கூட ஏற்படலாம்.

– இப்படி எச்சரித்திருக்கின்றார் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் வண.ஆயர் ஜோஸப் கிஸ்ஸிலி சுவாம்பிள்ளை.

நேற்று மன்னாரில் பொது நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மற்றும் மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த 'மறைக்கப்பட்ட மனிதர்களின் பதிவுகள்' எனும் நூல் வெளியீட்டு விழா நேற்றுக் காலை மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

அந்த நூலை வெளியிட்டு வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:–

காணாமலாக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்டவர்கள் குறித்து இலங்கை அரசு மறந்து போனாலும், ஐ.நாவில் உள்ள மக்களும், அதிகாரிகளும் அதனை மறக்கவில்லை. அவர்கள் அனைத்து விடயங்களையும் கண்காணித்துக் கொண்டிருக்கின்றனர்.

சொன்னவற்றை எல்லாம் இலங்கை அரசாங்கம் செய்கின்றார்களா என்பதனை அவதானித்துக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த காலங்களிலே ஐ.நா. சபை தங்களினால் பொறுமை காக்கும் அளவுக்கு பொறுத்துக் கொண்டார்கள். ஆனால் அளவுக்கு மிஞ்சி அமைதி காக்க மாட்டார்கள். எனவே சந்தர்ப்பம் ஏற்படும் போது அவர்களே நேரடியாக இறங்கும் கட்டம் ஏற்படலாம். அரசாங்கம் அக்கறை இன்றிச் செயற்பட்டால் ஐ.நா. தூதுவர் வந்து யுத்தக்குற்றச் சாட்டுக்கள் குறித்து ஆராய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். அதற்கான உரிமையும் அவர்களுக்கு உண்டு.

இன்று இப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்காது விட்டாலும் என்றோ ஒரு நாள் தீர்வு கிடைக்கும். நீதியை கேட்டிருக்கின்றீர்கள். வாழ்வாதாரத்தை கேட்டிருக்கின்றீர்கள். சாதாரண வாழ்வை வாழ வேண்டும் என்று கேட்டிருக்கின்றீர்கள்.

இப்படியான ஒரு கேள்விக்கு அரசாங்கம் தகுந்த பதிலை வழங்க வேண்டும். நீதியை வழங்க வேண்டும்.

இங்கு நடப்பவற்றைப் பார்க்கும் போது எனது அபிப்பிராயத்தின் படி இவை ஒருபோதும் இங்கு நடவா. இலங்கை அரசாங்கத்தினால் நடக்கா. ஆனால் வேறு வழிகளில் நடக்கலாம்.

இலங்கையில் காணாமலாக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்டவர்கள் குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை என்று கூறவில்லை. அக்கறை இருக்கின்றது. ஆனால் அவர்கள் அச்சமடைகின்றனர்.

பல்வேறு விடயங்களை அவர்கள் அறிந்துள்ள போதும் சரியானவற்றைச் செய்ய முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். இவற்றில் அரசியல் கலந்துள்ளது.

தங்களுடைய இராணுவத்தினரைக் குற்றம் சாட்டி அவர்களை காட்டிக்கொடுக்க முடியாத நிலையில் அரசியல்வாதிகள் உள்ளனர். நாளைக்கு நாட்டில் கலவரம் வெடிக்கலாம், பூகம்பம் வெடிக்கலாம்.

நாளை அவர்கள் எங்களை காட்டிக்கொடுக்கலாம். சிங்களவர், தமிழர் எனப் பிளவு ஏற்படும். அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் அவர்களின் ஆட்சிக்காலமே முடிந்து விடும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இ.செபமாலை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் பிரியதர்சன், மனித உரிமை செயற்பாட்டாளர் ரூக்கி பெணாண்டோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கான இணைய தலைவர் மாட்டீன் டயஸ் மற்றும் அருட்தந்தையர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்டவர்களின் உறவுகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மக்களிடம் பேசுங்கள்!

கொழும்பு, ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்த அமைச்சர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலை தொடர்பில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

*"விடுதலைப் புலிகளுக்கு இருந்த பேரம் பேசும் வலு, இன்று தமிழர் தரப்பிடம் இல்லை. சம்பந்தனைப் பார்த்து நீங்கள் ஒன்றும் செய்யவில்லை எனக் குறை சொல்வதில் நியாயமில்லை. ஆனால், மறுபுறம் தம்மால் இந்த வரையறைக்குள்ளேயே செயற்பட முடியும் என்ற உண்மையை - யதார்த்தத்தை - எடுத்துக் கூறி, அதைத் தமிழ் மக்களிடம் பகிர்ந்து கொள்வதில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறி விட்டது என்றே நான் நினைக்கின்றேன். தமிழ் மக்கள் தம்மிடம் கோபித்துக் கொள்வார்களோ என்று பயப்படாமல் உண்மையைக் கூற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எமது கொள்கைகள், இலக்குகள் மாறவில்லை. ஆனால், இப்போது கிடைப்பதை அதிகபட்சமாக வாங்கிக் கொண்டு அடுத்த கட்டத்துக்கு நகர்வதே முக்கியம். இன்றைய தீர்வு தமிழ் மக்களுக்கான அனைத்தையும் உடனடியாகத் தந்து விடமாட்டாது. ஆனால், முன்நோக்கிய நகர்வில் இருக்கிறோம் என்று மக்களைத் தயார் செய்வது அவசியம். இதைக் கூட்டமைப்பு சரியாகச் செய்வதில்லையோ என்று எண்ணுகிறேன்."* - என்று குறிப்பிட்டிருக்கின்றார் அமைச்சர் மனோ கணேசன்.

அவரது கருத்தில் சில உண்மைகள் இருக்கின்றன என்றே தோன்றுகின்றது. கூட்டமைப்புத் தலைமை மக்களுக்கு யதார்த்தத்தை எடுத்துரைப்பதில் - மக்களுடன் கலந்துரையாடி உண்மை நிலைவரத்தை மக்களுக்குப் புரியவைப்பதில் - தவறிழைத்து வருகின்றதோ என்றுதான் படுகின்றது.

நிகழ்வில் வாழாமல் - நிஜத்தில் வாழாமல் - எதையும் சாதிக்க முடியாது. யதார்த்தப் புறநிலைகளைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப செயற்படுவதை மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

தேர்தல் கால வாக்குறுதிகளை முழு அளவில் நிறைவு செய்வதில் உள்ள இடர்களை மக்களுக்குப் புரியவைக்கும் விதத்தில் எடுத்துரைத்தால் மக்கள் புரிந்து கொள்வார்கள்.

தேர்தல் கால வாக்குறுதிகள் எல்லாம் சுமந்திரனுக்கும் சம்பந்தனுக்கும் மட்டுமே கடமையாகின்றன, மற்றவர்கள் எல்லாம் அது நடைமுறையில் வராமையைக் காட்டி விமர்சிக்கலாம் என்ற மாதிரித்தான் தமிழர்களின் அரசியல் இப்போது போகின்றது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது 'மூன்றில் இரண்டு பங்கு இடங்களை வென்று தாருங்கள் ஆளுநரை மாற்றுகின்றோம், இராணுவ ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வந்து தாயக மண்ணில் இருந்து படைகளை அகற்றிக் காட்டுகின்றோம் என்றெல்லாம் தேர்தல் கால வாக்குறுதிக் கயிறுகள் கொடுத்தவர்களில் அப்போதைய முதலமைச்சர் வேட்பாளர் நீதியரசர் விக்னேஸ்வரனும் கூட அடக்கம்.

இப்போது, 'தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட சமஷ்டி எங்கே, வடக்கு - கிழக்கு இணைப்பு எங்கே, தமிழர்களுக்குரிய பகிரப்பட்ட இறைமை எங்கே, அவற்றையெல்லாம் கைவிட்டு விட்டு வந்து விட்டார்களா சுமந்திரனும், சம்பந்தனும்? - என்று கேட்பவர்களிடம், மூன்றில், இரண்டு பங்கு உறுப்பினர்களை வடக்கு மாகாண சபையில் தந்தால் இராணுவத்தை அகற்றுவோம், ஆளுநரை மாற்றுவோம் என்ற வாக்குறுதி மறந்து போய்விட்டமையை மக்கள் நினைவூட்ட வேண்டும்; கேட்க வேண்டும்.

இன்று கிடைப்பதை ஏற்காமல் விட்டால் கூட, தொடர்ந்து போராடத்தான் போகிறோம். கிடைப்பதைத் தாராளமாகப் பெற்றுக் கொண்டு, தொடர்ந்து போராடலாமே...?

இப்போதைய நிலையில் எது கிடைக்கும், எது சாத்தியம், எது பின்னால் பார்த்துக் கொள்வது என வலியுறுத்தி நிற்பது என்பதில் கூட்டமைப்புக்குள் - அதன் தலைமைக்குள் - தெளிவிருக்க வேண்டும். அதைத் துணிச்சலுடன் மக்கள் முன் எடுத்துரைத்து, மக்களைத் தயார் படுத்தும் அரசியல் சுறுசுறுப்பும் செயற்போக்கும் இன்றியமையாதவை. அதை விடுத்து, மைக்கைப் பிடித்தால் எதுவும் பேசலாம் என்ற நிலையில் தலைவர்கள் செயற்படக்கூடாது.

தீர்வுக்கான முயற்சியில் ஈடுபடுபவர்கள் வடக்கு - கிழக்கு இணைப்பை வலியுறுத்துகின்றோம், அதை விட்டுக் கொடுக்க மாட்டோம், ஆனால், அதனை நிறைவேற்றுவது உடனடியாகச் சாத்தியமற்றது என்ற தொனியில் கருத்துக் கூறிக் கொண்டிருக்க -

மறுபுறம் 'பிரிக்க முடியாத தாயகத்தில் தமிழ் மக்களின் இறையாண்மையை உறுதி செய்யும் சமஷ்டித் தீர்வைத் தவிர வேறு குறைந்த எதற்கும் இணங்க மாட்டோம்' - என்று அதே கூட்டமைப்பின் வேறு தலைவர்கள் சிலர் கைதட்டலுக்காக பேசிக் கொண்டிருந்தால், மக்கள் மத்தியில் குழப்பம் வருவதும் மாற்றுத் தலைமை குறித்து சிந்திக்க முற்படுவதும் தவிர்க்க முடியாதனவே.

'சமஷ்டி' என்ற சொல் தென்னிலங்கையில் கசப்பாகி விட்டது. அந்த கசப்பு மருந்தைத் தென்னிலங்கையை அச்சுறுத்தித் தன்னும் - மிரட்டித் தன்னும் - விழுங்க வைக்கச் செய்யும் பலம் தமிழர்களிடம் அகப்பலமாகவும் இல்லை; சர்வதேச ஆதரவு போன்ற வடிவில் புறப்பலமாகவும் இல்லை.

ஆக, அதனை வேறு தந்திரோபாயத்தால்தான் அடைய முடியும்.

அப்படி அடைவதற்கு ஒரே மார்க்கம் மக்களுடன் பேசுவதுதான்; மனம் திறந்து பேசுவதுதான்; உண்மையை - யதார்த்தத்தை - சாத்தியமானதை - மக்களிடம் எடுத்துரைத்து முன் நகர்வதுதான். செய்வார்களா கூட்டமைப்பினர்? எதிர்பார்க்கலாமா?...

# அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே தசநாயக்க கைது

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 18

கடற்படையினர் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களின் அடிப் படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் செயலாளர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகரவின் தகவலை பார்க்கும்போது 11 இளைஞர்களின் கடத்தல் தொடர்பில் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களின் அடிப் படையிலேயே தசநாயக்க கைது செய்யப் பட்டுள்ளார்.

எனவே தம்முடன் பகிரங்க விவாதம் ஒன்றுக்கு வருமாறு பொலிஸ் பேச்சா ளரை அழைக்கின்றேன். மேலும், போர்க்காலத்தின் போது இடம்பெற்ற கடத்தல்களுக்கு போரை வெற்றி கொண்ட படையினர் பொறுப்பல்லர்.-என்றார்.

(எ)

## துவேசத்தை பரப்புவோர் அரசியல்வாதிகளே!

### இவ்வாறு கூறுகிறார் அமைச்சர் பௌஸி



தாங்கள் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, மக்களிடையே இன ரீதியான துவேசங்களை, அரசியல்வாதிகளே பரப்புகின்றனர் என்று தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்தார்.

தன்னாமுனை மியானி நகர் பொன்தானா மண்டபத்தில் நேற்றுஇடம் பெற்ற தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் அனுசரணையில், நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடலிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி, சகல மக்களும் ஒரே குடும்பம் போல் இணைந்து வாழ்வதற்கு என்னால் இயன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறேன் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

## இந்திய மீனவர்கள் 4 பேர் நேற்றுக் கைது!

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து ஆழ்கடல் மீன்பிடியில் ஈடு பட்ட இந்திய மீனவர்கள் 4 பேர் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப் பட்டுள்ளனர்.

அந்த நான்கு மீன வர்களையும் கைது செய் ததுடன் அவர்களது இரு படகுகளையும் கைப்பற்றியுள்ளனர் என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்ட மீனவர்கள் யாழ். கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளைத் தொடர்ந்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை இந்திய மீனவர்கள் 7 பேர் இவ்வாறு அத்துமீறியமை தொடர்பில் கைது செய்யப்பட்டனர்.

## இனப்பிரச்சினைக்கான தீர்வு நல்லாட்சியில் வரவே வராது!

### தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்கான அமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல்

நல்லிணக்கம் என்பதெல்லாம் அரசியல் முகமே தவிர இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பது நல்லாட்சியில் இடம்பெறப் போவதில்லை என தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


இலங்கையின் மனித உரிமை நிலைவரத்தை அம்பலப்படுத்திய ஐ.நா. அறிக்கையாளர் மீது இனவாத மற்றும் அடக்குமுறைச் சிந்தனை அடிப்படையிலேயே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கோபத்தை வெளிக்காட்டியுள்ளார்.

போர்க் குற்றம் இடம்பெறவில்லை இராணுவத்தை சர்வதேச நீதிமன்றம் முன் நிறுத்த மாட்டோம் என்று நீதி அமைச்சர் கூறி இருக்கின்றமை பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை மறுக்கும் செயல் மட்டுமல்ல உண்மையை ஏற்றுக்கொள்ள நல்லாட்சி ஆயத்தம் இல்லை என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களிடம், வன்முறையைப் பாவித்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப் படவில்லை என்பதையும், அவ்வாறு பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்ப டையில் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படவில்லை என்பதையும் நீதி அமைச்சர் நிரூபிப்பாரா?- என்றுள்ளது.

### நீண்ட கால சிறுநீரக நோய்களை (CKD) தவிர்த்திட

- விவசாய இரசாயனப் பொருள் பாவனையை குறைத்திடல் வேண்டும்.
- விவசாய இரசாயனப் பொருள்கள் பிரயோகிக்கும்போது தற்காப்பு முறைகள் உபயோகித்தல்.
- காற்றின் திசையில் இரசாயனப் பொருள்கள் விசிறுதல்.
- இரசாயனம் தெளிக்கும் உபகரணங்களை நீர் நிலைகளுக்கு அருகில் கழுவுதலை தவிர்த்தல்.
- விவசாய இரசாயன வெற்றுப் போத்தல்களை பாதுகாப்பான முறையில் அகற்றுதல்.
- விவசாய இரசாயனப் பொருள்களைத் தெளித்த பின்பு, உடலை நன்கு கழுவிக் கொள்ளுதல்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

19.07.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : கார்த்திகை மா. 5.40 வரை
திதி : ஏகாதசி பி.இ 2.01 வரை
சுபநேரம் : 4.31 - 6.01 வரை
இராகுகாலம் : 12. 01 - 1.31 வரை

# கூட்டு அரசுக்குள் பிளவு;

# ஒட்டவைப்பதற்கு ஜனாதிபதி தீவிர முயற்சி!

கொழும்பு, ஜூலை 18

பங்களாதேஷ் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கூட்டு அரசில் பிளவுகளை ஏற்படுத்தக் கூடிய- சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மத்தியில் ஏற்பட்டுள்ள புதிய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் முக்கிய கவனம் செலுத்தி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷுக்குப் புறப்படுவதற்கு முன்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த அமைச்சர்கள் பலர், இந்த ஆண்டில் நடத்தப்படும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசை அமைக்க வேண்டும் அல்லது, கூட்டு அரசை விட்டு வெளியேற வேண்டும் என்று கோரியிருந்தனர்.

அது ஒரு சூடான கருத்துக்கள் பரிமாறப்பட்ட கூட்டமாக இருந்தது. பங்களாதேஷில் இருந்து திரும்பியதும் இது குறித்துக் கலந்துரையாடப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். அவருக்குப் பல தெரிவுகள் இருக்கவில்லை என்று, அமைச்சர் வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.



கடந்த 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டாளிகளும் 94 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தன. எனினும், இந்தக் குழு சிறிசேன மற்றும் மஹிந்த என இரண்டு பிரிவுகளாகப் பிளவுபட்டிருந்தன.

மஹிந்தவும், மைத்திரியும் முழுமையான இணக்கப்பாட்டின் அடிப்படையில் இணைந்து செயற்பட்டிருந்தாலும் கூட, 225 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்கு மேலும் 19 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

கடந்த 4ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.தே.க. அமைச்சர்களான சாகல ரத்நாயக்க மற்றும் விஜேதாச ராஜபக்ஷ ஆகியோருக்கு எச்சரிக்கை விடுத் துள்ளார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர் வட்டாரங்கள் தெரிவித்தன.

தமது செயற்பாடுகளை மூன்று மாதங்களுக்குள் சீர்படுத்தாவிடின், முழு ஐ.தே.க. அரசையும் பதவிநீக்கம் செய்யக் கோரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மூத்த உறுப்பினர்கள் சிலரின் கோரிக்கையை கருத்தில் எடுக்க நேரிடும் என்று அவர்களுக்கு கூறப்பட்டுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு ஐ.தே.க. அரசை, அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலைத்தமை போன்ற முடிவை மைத்திரிபால சிறிசேனவும் எடுக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி மூத்த உறுப்பினர்கள் சிலர் கோரியுள்ளனர்.

அப்போது இரண்டரை ஆண்டுகளில் ரணில் விக்கிரமசிங்க அரசை கலைத்து, புதிய தேர்தலுக்கு உத்தரவிட்ட சந்திரிகா குமாரதுங்க, அதன் பின்னர், ஜே.வி.பியுடன் இணைந்து ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார்.

எனினும், 19ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ், தற்போதைய நாடாளுமன்றத்தை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கலைக்க முடியாது.

சந்திரிகா குமாரதுங்க தனது சொந்த செல்வாக்கில் பதவிக்கு வந்தவர். ஆனால், சிறிசேன அவ்வாறில்லை அவர் பெருமளவில் ஐ.தே.க. வாக்குகளினால் தான் பதவிக்கு வந்தார்.

எதிர்வரும் செப்ரெம்பருடன் முடிவடையும் இரண்டு ஆண் டுகால புரிந்துணர்வு உடன்பாடு முடிவுக்கு வந்ததும், தாம் கூட்டு அரசை விட்டு வெளியேறவுள்ளோம் எனவும், ஒரு டசினுக்கும் அதிகமான சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

எனினும், இவர்களின் அச்சுறுத்தலினால் அரசுக்கு உடனடி அச்சுறுத்தல் ஏற்படாது. கூட்டு அரசு பிளவுபடக்கூடும். ஆனால், ஐ.தே.க. தலைமையிலான அரசு பலமான நிலையில் தான் இருக்கும்.

எவ்வாறாயினும். இது அரசமைப்பு திருத்தத்துக்கு தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முழுமையான ஆதரவு விலக்கப்பட்டால் கூட, நாடாளுமன்றத்தில் 107 ஆசனங்களைக் கொண்டிருக்கின்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.கவுக்கு, பெரும்பான்மையை நிரூபிக்க 6 ஆசனங்கள் மாத்திரமே தேவைப்படும்.

அதற்காக அவர்கள் 6 ஆசனங்களைக் கொண்ட ஜே.வி.பியையோ, 16 ஆசனங்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையோ நாடக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

# கனடாவில் இலங்கையர் மீது கொலைக் குற்றச்சாட்டு!

## வழக்கு விசாரணைகள் வேண்டுமென்றே தாமதப்படுத்தப்பட்டன எனக் குற்றச்சாட்டு

கொகும்பு, ஜூலை 18

கனடாவில் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட இலங்கையரது வழக்கு விசாரணைகள் வேண்டுமென்றே தாமதப்படுத்தப்பட்டன எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்று அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கனடாவில் குடியுரிமை பெற்ற இலங்கையரான தனபாலசிங்கம் சிவலோகநாதன் என்பவரின் வழக்கு விசாரணையே இவ்வாறு தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

கொலைக் குற்றச்சாட்டுக்கு முகங்கொடுத்த இலங்கையர் தொடர்பான வழக்குகளில், பாதுகாப்புக் குழு தனது குற்றச்சாட்டுகளை தாமதப்படுத்துவதில் முக்கிய பங்கை வகித்ததாக கியூபெக்கின் குற்றவியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் இயக்குநர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சமீபத்தில் நாடு கடத்தப்பட்ட தனபாலசிங்கம் சிவலோகநாதனின் மீது கொலைக் குற்றச்சாட்டுக்களை தக்க வைத்துக் கொள்வதற்கான முடிவை எடுக்கும் வகையில் கிரௌன் நீதிமன்றத்தின் வாதங்கள் காணப்பட்டன என கனடா வானொலி ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

தனபாலசிங்கம் மற்றும் அவரது சட்ட குழுவினரால் ஏற்பட்டுள்ள தாமதங்களை உயர்நீதிமன்ற நீதிபதி ஜஸ்டிஸ் அலெக்சாண்டர் பவுச்சர் கருத்திற்கொள்ளாமல் தவறிழைத்துள்ளார். அதேபோல் வழக்கு தொடர்பான சிக்கல் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவில்லை எனவும் வழக்கின் சுருக்கம் கூறுகின்றது.

தனபாலசிங்கம் கடந்த 2012 ஆம் ஆண்டு அவரது மனைவி அனுஜா பாஸ்கரனை கொலை செய்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டார். எனினும் இந்த வழக்கை விசாரிப்பதற்கு நீதிபதி பவுச்சர் 55 மாதங்களை எடுத்துக் கொண்டார்.

கொலைக் குற்றம் சுமத்தப்பட்டவர் ஒருவரின் வழக்கு கனடா உயர் நீதிமன்றத்தில் இந்தளவு தாமதத்தை ஏற்படுத்துவது நியாயமற்ற ஒரு விடயமாகும்.

குறைந்த அளவிலான கடுமையான குற்றம் சுமத்தப்பட்ட வழக்கு விசாரணைகள் 18 மாதங்களுக்குள் நிறைவு செய்திருக்க வேண்டும். மேலும் கொலை உட்பட, பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தப்பட்டவை, 30 மாத காலப்பகுதிக்குள் நிறைவு செய்திருக்க வேண்டும்.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு முதல் தனபாலசிங்கத்தின் விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளது என கிரௌன் நீதிமன்ற ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இன்னும் ஒரு நீதிபதி 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மற்றும் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த வழக்கிற்கான திகதிகளை முன்வைத்தார்.

இந்த நிலையில் தனபாலசிங்கம் தானாகவே நாடு கடத்தலை விரும்பி ஏற்றுக் கொண்டதற்கமைய அவர் அண்மையில் கனடாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2025 வரை நல்லாட்சி அரசு தொடரும் : இனவாதத்தை தூண்ட இடமளிக்கப்படாது!

*அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறுகிறார்*



கொழும்பு, ஜூலை 18

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு வரையில் நல்லாட்சி அரசின் ஆட்சி முன்னெடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 17 ஆளும் கட்சி அமைச்சர்களை விலகப் போவதாக வெளியான தகவல்கள் குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசு எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரையில் ஆட்சியை முன்னெடுக்கும். அதன் பின்னர் மீளவும் 2025 ஆம் ஆண்டு வரையில் ஆட்சியைத் தொடரும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு படையினரை வேட்டையாடுகிறது என கூட்டு எதிர்க்கட்சி சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

மனிதப் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கொலைகள், கப்பம் கோரல்கள் போன்றவற்றில் ஈடுபடுமாறு படைவீரர்களை கடந்த காலங்களில் சில அரசியல்வாதிகள் பிழையாக வழிநடத்தியுள்ளனர்.


கடந்த காலங்களில் நாடு முழுவதிலும் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் படைவீரர்கள் கைது செய்யப்பட்டனர்.

சில படையினர் போதைப் பொருள் கடத்தியிருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் படையினர் இல்லையா?

யாரேனும் ஓர் உயர் பாதுகாப்பு அதிகாரி கைது செய்யப்பட்ட உடன் அவரை படைவீரராக்கி அரசின் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாகாணசபை அதிகாரங்களை முறையாகப் பகிர்ந்தால் மாகாண சுகாதாரத்துறை மேலும் அபிவிருத்தி அடையும்

## கிழக்கு சுகாதார அமைச்சர் கருத்து



அரசமைப்பில் மாகாண சபைகளுக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசு முறையாக நடைமுறைப்படுத்தினால் மாகாண சுகாதாரத் துறை அபிவிருத்தியடையும் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முஹம்மத் நஸீர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் சுகாதாரத்துறை எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில், மாகாண நிர்வாகத்தின் கீழ் 13 ஆதார வைத்தியசாலைகளும், மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் நான்கு வைத்தியசாலைகளும் என மொத்தமாக 17 ஆதார வைத்தியசாலைகள் உள்ளன. இந்த விடயத்தை மத்திய அரசும் ஆச்சரியமாக நோக்குகின்றது.

எனினும், வைத்தியர், தாதியர், மருத்துவ ஊழியர்கள் போன்ற ஆளணி பிரச்சினைகளை கிழக்கு மாகாண சுகாதாரத்துறை எதிர்நோக்கி வருகின்றது.

இந்தப் பிரச்சினைகள் முழு இலங்கையிலும் காணப்பட்டாலும், அரசமைப்பில் உள்ளவாறு அதிகாரத்தை மத்திய அரசு வழங்கினால், இவ்வாறான பிரச்சினைகளை மாகாண மட்டத்திலேயே தீர்த்துக் கொள்ள முடியும்.

மேலும், மூவின மக்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில் இன விகிதாசாரத்துக்கேற்ப வளப்பங்கீடுகள் இடம்பெறவேண்டும்.-என்றார். (எ)

## காலாவதியான உப்புப் பைகள் திருமலையில் பறிமுதல்!

திருகோணமலை நகரத்தில் காலாவதியான உப்பு பொதிகளை திகதி மாற்றப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன எனக் கிடைக்கப் பெற்றதகவலையடுத்து பாவனையாளர் அதிகார சபையினர் நேற்று சுற்றி வளைப்பை மேற்கொண்டு உப்புப் பொதிகளை கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட 900 இற்கும் மேற்பட்ட உப்புப் பொதிகளில் பொதி செய்யப்பட்ட திகதிக்கு மேல் புதிதாக காலாவதியாகும் திகதி மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

உப்பு பொதிகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பாக உப்பு பைக்கற்றுக்களை வழங்கிய பிரதான உற்பத்தியாளர்களைக் கண்டுபிடித்து விளக்கம் கோரப்படவுள்ளது.

கைப்பற்றப்பட்ட உப்புக் பைக்கற்றுகளின் உரிமையாளர் திருகோணமலையில் மொத்த வியாபாரம் செய்பவர் என்றும் தெரிய வந்துள்ளது. (எ)

## இராஜபுரத்தில் குடிதண்ணீர்த் தாங்கி



மட்டக்களப்பில் இயங்கிவரும் 'அஹிம்சா' எனும் தன்னார்வத் தொண்டர் அமைப்பின் 'தாகம் தீர்ப்போம்' எனும் தொனிப் பொருளில் குடிதண்ணீரைப் பெறுக்கொடுக்கும் திட்டத்தின் கீழ், ஏறாவூர்ப் பற்றுப் பிதேச செயலகப் பிரிவிலுள்ள இராஜபுரம் கிராமத்தில் குடிதண்ணீர்த் தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இராஜபுரம் மகா விஷ்ணு ஆலயத்துக்குச் சொந்தமான காணியினுள் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குடிதண்ணீர்த் தாங்கி ஆலய நிர்வாகத்தினதும் இராஜபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும் பொறுப்பில் இருக்கும். அதேநேரம் ஏறாவூர்ப் பற்று பிரதேச சபை மேற்பார்வை செய்து பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

## கதிர்காம ஆலயத் திருவிழாவையொட்டி கல்முனையிலிருந்து விசேட பஸ் சேவை

கல்முனை, ஜூலை 18

கதிர்காம ஆடிவேல் விழாவையொட்டி, எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் கல்முனையிலிருந்து கதிர்காமத்துக்கு விசேட இ.போ.ச. பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கல்முனைச்சாலையின் முகாமையாளர் வி.கவ்பர், தெரிவித்தார்.

கதிர்காமத் தீர்த்தோற்சவம் முடிவடையும் ஒகஸ்ட் 8ஆம் திகதி வரை இந்த பஸ் சேவை இடம்பெறும் என்று அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தினமும் காலை 6 மணிக்கு கல்முனையிலிருந்து கதிர்காமம் நோக்கிப் புறப்படுவதற்கு இந்த பஸ் சேவையின் ஒருவழிக் கட்டணம் 430 ரூபாவாகும்.

இந்நிலையில், மட்டக்களப்பிலிருந்து 490 ரூபாவும், களுவாஞ்சிக்குடியிலிருந்து 450 ரூபாவும், அக்கரைப்பற்றிலிருந்து 390 ரூபாவும், பொத்துவிலிலிருந்து 310 ரூபாவும் பாணமையிலிருந்து 270 ரூபாவும் கதிர்காமத்துக்கான ஒரு வழிக்கட்டணமாக அறவிடப்படும்.

முற்கூட்டிய ஆசனப் பதிவை பயணிகள் மேற்கொள்ள முடியும் என்பதுடன், முற்கூட்டி குழுவாகப் பதிவு செய்தால், தனி பஸ்ஸை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்படும். பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன.

தீர்த்தத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களை மீண்டும் அழைத்து வரவும் கூடுதலான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.-என்றார். (எ)

## மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சரால் நிறுவனங்களுக்கு பொருள்கள் கையளிப்பு

புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்வின் 2017 ஆம் ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை, காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு, காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொருள்களைக் கையளித்தார்.

மேற்படி நிதியொதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட இந்தப் பொருள்கள், காத்தான்குடிப் பிரதேசத்திலுள்ள கழகங்கள், சங்கங்கள், பாலர் பாடசாலைகள் மற்றும் மதரசாக்கள் என 15 பொது நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)




## காரைதீவிலும் 28 ஆவது வீரமக்கள் தின நிகழ்வுகள்







28 ஆவது வீரமக்கள் தின நிகழ்வுகள் அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு கனகரெட்ணம் விளையாட்டரங்க மண்டபத்தில் சனிக்கிழமை புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயற்குழு உறுப்பினரும், மாவட்ட இணைப்பாளருமாகிய மகாதேவன் சிவநேசன் (பக்தன்) தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் புளொட் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உப தலைவர்களுள் ஒருவரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.வியாழேந்திரன், கட்சியின் முக்கியஸ்தர்கள், கட்சி உறுப்பினர்கள் மற்றும் உயிர்நீத்த கழக உறுப்பினர்களின் உறவுகள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள், ஊர்ப் பெரியோர்கள், பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டிருந்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir



# சிமெந்து தொழிற்சாலை இயந்திரங்களை விற்பனை செய்ய அனுமதி வழங்கவில்லை!



## கோட்டாபய ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 18

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின், இயந்திரங்களை அகற்றுவதற்கோ அவற்றைப் பழைய இரும்புக்காக விற்பனை செய்வதற்கோ தாம் அனுமதி அளிக்கவில்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை இயந்திரங்களை வெட்டி அகற்றுவதற்கு அனுமதி அளிப்பதற்கான எந்த ஆவணமும், கையெழுத்திடுவதற்காக வந்ததை நான் பார்க்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரிய ஊழல்கள் மற்றும் மோசடிகள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் தாம் தாக்கல் செய்துள்ள சத்தியக் கடதாசியிலேயே கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி உள்ளிட்ட இரண்டு மூத்த இராணுவ அதிகாரிகள் மற்றும் மூத்த அரச அதிகாரி ஒருவருக்கு எதிராகக் கோட்டாபய ராஜபக்ஷ இந்த சத்தியக் கடதாசியைச் சமர்ப்பித்துள்ளார்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் இயந்திரங்கள், இராணுவத்தினரால், பத்துக் கோடி ரூபாவுக்கு பழைய இரும்புக்காக வெட்டி விற்கப்பட்டமை தொடர்பாக பெரிய ஊழல்கள் மற்றும் மோசடிகள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

முன்னைய ஆட்சிக் காலத்தில் 2011இற்கும் 2015இற்கும் இடையில்- இந்த மோசடி இடம்பெற்றிருந்தது. விசாரணைகளில் இந்த மோசடி தொடர்பான ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளித்திருந்த பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலர் சிறிபால ஹெட்டியாராச்சி, இந்த இரும்பை விற்பனைசெய்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ அனுமதி அளித்துள்ளார் என்று பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தம்மிடம் கூறி, அதிகாரபூர்வ குறிப்பை வெளியிட்டார் என்று தெரிவித்திருந்தார்.

அதேவேளை, இதனை விற்பனைசெய்வதற்கு அமைச்சரவை அனுமதி அவசியம் என்ற உள்ளக கணக்காய்வாளர் பிரேமசந்திர சுட்டிக்காட்டியுள்ள இன்னோர் அறிக்கையும் பாதுகாப்பு அமைச்சில் உள்ளது.

சிமெந்துத் தொழிற்சாலை இயந்திரங்கள் பிரித்தானியா மற்றும் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்டவையாகும். ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்களுக்கு உற்பத்தியாளர்களால்100 ஆண்டுகால உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த இயந்திரங்களை வெட்டி எடுக்கப்பட்ட இரும்பு, சிராஸ் முகமட், யூசுப் அஸ்தான் மற்றும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான எக்கநாயக்க ஆகியோருக்கு விற்கப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான எக்கநாயக்கவுக்கு விற்கப்பட்ட இரும்பின் பெறுமதி ஏழரைக் கோடி ரூபா என தெரியவந்துள்ளது.

741 ஏக்கர் பரப்பளவுள்ள சிமெந்துக் கூட்டுத்தாபன காணியை சுவீகரிக்காமல் இரா ணுவம் தன்னிச்சையாகவே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்றும் தெரியவந்திருக்கிறது.

இதுதொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க, முன்னாள் யாழ். படைகளின் தலைமையக தளபதிகளான மேஜர் ஜெனரல்கள் மஹிந்த ஹத்துருசிங்க, உதய பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலர் சிறிபால ஹெட்டியாராச்சி, சிராஸ் முகமட், யூசுப் அஸ்தான் ஆகியோரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை நீதித்துறையின் கரங்களை கட்டிவைத்துள்ளார் சட்டமா அதிபர்!

## ஐ.நா. நிபுணர் குற்றச்சாட்டு



இலங்கை நீதித்துறையின் கரங்களை சட்டமா அதிபர் கட்டி வைத்திருக்கிறார் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட மனித உரிமைகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்புக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்ஸன் குற்றம் சாட்டியுள்ளார்.

தனது இலங்கைப் பயணத்தின் முடிவில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை நீதித்துறையின் கரங்கள் சட்டமா அதிபர் மூலமாக கட்டி வைக்கப்பட்டுள்ளன. இது ஜனநாயக நீதித்துறையின் அடிப்படைத் தத்துவம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு முற்றிலும் முரணானது.

எந்தவொரு பிணை மனுவையும் நிராகரிக்கும் அதிகாரம் பெற்றவராக சட்டமா அதிபர் இருக்கிறார். இந்த நடைமுறை இன்னமும் இலங்கையில் உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

# பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்கவை 3 நாள்கள் சி.ஐ.டியினர் விசாரிக்க அனுமதி!

பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்கவை 3 நாள்கள் சி.ஐ.டியினர் விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரை தப்பிக்க உதவிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதி காவல்துறை மா அதிபர் லலித் ஜெயசிங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலை குற்றப் புலனாய்வுப் பிரிவு தலைமையகத்துக்கு விசாரணைக்காக அழைக்கப் பட்ட பிரதி காவல்துறை மா அதிபர் லலித் ஜெயசிங்கவிடம் நீண்ட நேரம் விசாரணை நடத்தப்பட்டது.

இதையடுத்து, அவர் மாலையில் கைதுசெய்யப்பட்டார். உடனடியாக அவர், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவதற்காக கொழும்பில் இருந்து அழைத்து வரப்பட்டார்.

இதன்போது, பிரதி காவல்துறை மா அதிபர் லலித் ஜெயசிங்கவை ஏற்றி வந்த வாகனம் நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் ஊர்காவற்றுறைப் பகுதியில் விபத்துக்குள்ளானது.

எனினும், எவருக்கும் காயம் ஏற்படாத நிலையில், நேற்றுமுன்தினம் காலை ஊர்காவற்றுறை பதில் நீதிவான் முன்பாக, அவர் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதையடுத்து, எதிர்வரும் 25ஆம் திகதி வரை லலித் பிரதி ஜெயசிங்கவை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை, பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்கவை மூன்று நாள்கள் தமது காவலில் வைத்து விசாரிக்கக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விடுத்த கோரிக்கையை நீதிவான் ஏற்றுக் கொண்டு அதற்கும் அனுமதி அளித்தார்.

இதேவேளை, இந்த வழக்குத் தொடர்பாக, மற்று மொரு பொலிஸ் அதிகாரியும், தேசியக் கட்சி ஒன்றில் போட்டியிட்ட அரசியல் பிரமுகர் ஒருவரும் கைது செய்யப்படக் கூடும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (க)

# தபால் உத்தியோகத்தர் மீது வாள்வெட்டு!!

வாள்வெட்டுக்கு இலக்காகிய தபால் உத்தியோகத்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலை அவசரசிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு உடையார்கட்டைச் சேர்ந்த குணபாலன் வயது 50 என்பவரே இவ்வாறு சிகிச்சைபெற்றுவருபவராவார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்த உத்தியோகத்தரின் வீட்டிற்குள் நுழைந்த மர்ம நபர் ஒருவர் அவருடன் உரையாடிக் கொண்டிருந்த சமயம் திடீரென கழுத்தை நோக்கி வாளினால் வெட்டி தாக்குதல் நடத்தியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் படுகாயமடைந்த இந்த உத்தியோகத்தர் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க)

# மைத்திரியின் உத்தரவை மதிக்காத சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள்!

டிசெம்பர் மாதம் வரையில் பொறுமையாக இருக்க முடியாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிருப்திக்குழு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்துள்ளது.

தேசிய அரசிலிருந்து வெளியேறுமாறு சுதந்திரக் கட்சியின் அதிருப்திக் குழுவைச் சேர்ந்த 18 உறுப்பினர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தம் கொடுத்திருந்தனர்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரையில் பொறுமையாக இருக்குமாறும், வரவு - செலவுத் திட்டத் தொடருடன் முடிவெடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், டிசெம்பர் மாதம்வரையில் பொறுமையாக இருக்க முடியாது என்று அதிருப்திக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

''ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறாமல் இருப்பதாக இருந்தால், பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்க வேண்டும். எதிர்க்கட்சி வரிசையில் அமர்வதற்கு எமக்கு அனுமதி வழங்க வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளையும் ஜனாதிபதி ஏற்கமறுத்தால், தாம் வெளியேறுவோம்'' என்று அவர்கள் கூறியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள இந்த நெருக்கடிகளைச் சமாளிக்கும் நடவடிக்கையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஈடுபட்டுள்ளார்.

# அஞ்சல் திணைக்களத்துக்கு 200 கோடி ரூபா நட்டம்!

## கடந்த 5 வருடங்களில் மட்டும்

கொழும்பு, ஜூலை 18

அஞ்சல் திணைக்களத்துக்கு கடந்த 5 வருட காலப் பகுதியில் 200 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள பணியக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுக்கு அமைய கடந்த வருடத்தில் மாத்திரம் 6 கோடி 61 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அது மாத்திரமன்றி அந்த வருடத்தில் ஒரு கோடி 33 லட்சம் ரூபா வருமானக் குறைவு ஏற்பட்டுள்ளது.

கடந்த 5 வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடமே மிகக் குறைந்த வருமானம் ஈட்டிய ஆண்டாக பதிவாகியுள்ளது. (எ)

## தினசரி ராசி பலன் 18.07.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆடித் திங்கள் 03 ஆம் நாள் நவமி திதி பகல் 10 மணி வரை. பின்னர் தசமி. நட்சத்திரம்: பரணி இரவு 9.44 மணி வரை. பின்னர் கார்த்திகை. சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: மாலை 3.25 மணி முதல் 4.59 மணி வரை. சுபநேரம்: பகல் 10.32 மணி முதல் 12.02 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: ஆடி மாத தேய்பிறை தசமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: பரணி.**

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** : உயர்வான நாள். தொழில் துறையில் இருந்த சிரமங்கள் அனைத்தும் நீங்கும். தூரதேச யாத்திரை செய்யும் வாய்ப்பு ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகள் கிடைக்கும்.

**ரிஷபம்** : யோசனையான நாள். தொழில் துறையில் முடக்கமும், அலைச்சலும் ஏற்பட்டு தூக்கமின்மை ஏற்படும். உத்தியோகத்தில் வேலைப்பளுவால் பெரிதும் சிரமப்பட நேரும்.

**மிதுனம்** : ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. தாராள பணப்புழக்கம் ஏற்படும். வீடு வாங்கும் யோகமும், புதிய ஆபரணச் சேர்க்கையும் உண்டாகும். வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும்.

**கடகம்** : சமபலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் புதிய முயற்சிகள் தடைப்படும். தேகநலக்குறைவால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**சிம்மம்** : மேன்மையான நாள். குடும்ப உறவு மேம்படும். உத்தியோகத்தர்களுக்கு மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**கன்னி** : அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோக விஷயமாய் வெளியூர்களுக்கு அலைய வேண்டி வரும். சொந்த வீடு வாங்க எண்ணிய சிலர் தகுந்த இடம் தேடி தரகர்களின் உதவியை நாடுவார்கள்.

**துலாம்** : மத்திம பலன்கள் காணப்படுகின்றன. செலவினங்கள் அதிகரிக்கும். வர்த்தகத்தில் எதிர் பார்த்த லாபம் குறையும். சுயதொழில் விருத்திகுன்றும்.

**விருச்சிகம்** : உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. எண்ணிய கருமம் நிறைவேறும். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோக உயர்வுகள் காணப்படுகின்றன.

**தனுசு** : ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. வியாபாரத்தில் ஆக்கபூர்வ முன்னேற்றம் கிடைக்கும். பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**மகரம்** : யோசனையான நாள். குடும்பத்தில் சச்சரவு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தொழிலில் கடின உழைப்பு இருந்தும் பலன் இருக்காது.

**கும்பம்** : சமபலன்கள் காணப்படுகின்றன. பண விஷயத்தில் யாருக்கும் பிணை போகக் கூடாது. நண்பர்கள் உதவி கிடைக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும்.

**மீனம்** : கீர்த்தியான நாள். எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத் தரும். உத்தியோகத்தரின் திறமையால் நன்மதிப்பு உண்டாகும்.

**சந்திராட்டமநாள்: உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதங்களில் பிறந்தோர் அவசியம் இன்று சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# சிறுவர்களுக்கு எதிராக இதுவரை 3,758 முறைப்பாடுகள் பதிவாகின

## சிறுவர் அதிகார சபை தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

சிறுவர்களுக்கு எதிராக இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில், 3 ஆயிரத்து 785 முறைப்பாடுகள் வரை கிடைக்கப் பெற்றுள்ளன என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் முறையிடுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 1929 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் இந்த முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டுள்ளது.

24 மணித்தியாலங்களும் அந்த இலக்கம் சேவையில் இருக்கும் என்றும், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் எந்தவொரு முறைப்பாட்டையும் இதன்மூலம் முன்வைக்க முடியும் என்றும், அந்த அதிகார சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் அதிகார சபை மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதற்கமைய, சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் 956 முறைப்பாடுகளும், கல்வி அறிவை வழங்காமை தொடர்பில் 602 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

அத்துடன், பாலியல் வன்கொடுமைகள், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், திருட்டு வேலைகளுக்கு அவர்களைப் பயன்படுத்துதல் மற்றும் கடத்திச் செல்லல் போன்றன தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேலும், இவற்றில் அதிக முறைப்பாடுகள் (569) கொழும்பில் இருந்தே கிடைக்கப் பெற்றுள்ளன. கம்பஹாவில் இருந்து 420 முறைப்பாடுகளும், குருநாகலில் இருந்து 283 முறைப்பாடுகளும், காலியில் 259 முறைப்பாடுகளும் இரத்தினபுரியில் இருந்து 214 முறைப்பாடுகளும் இவ்வாறு பதிவாகியுள்ளன.- என்றது. (எ)

# குறைவடைந்து வரும் குளங்களின் நீர்மட்டம் சிரமங்களின் மத்தியில் முல்லைத்தீவு மக்கள்



முல்லைத்தீவில் குளங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளதால் விவசாயம், நன்னீர் மீன் பிடி, நிலத்தடி நீர், விலங்குகளுக்கான குடி தண்ணீர் தேவைகளை பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவின் முக்கிய குளங்களான முத்தையன்கட்டுக் குளம், வவுனிக்குளம் என்பவற்றின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதால் அந்தக் குளங்களின் கீழான விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்தக் குளங்களை நம்பியுள்ள ஆயிரத்துக்கும் மேலான நன்னீர் மீன்பிடி குடும்பங்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு முல்லைத் தீவு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது அமைப்புக்கள் பல கோரிக்கை விடுத்துள்ளன. (எ)

# பேராதனைப் பல்கலை வெளிவாரி பரீட்சை ஓகஸ்ட் 12இல் ஆரம்பம்

பேராதனைப் பல்கலைக் கழகம் ஏப்ரல் மாதம் நடத்த இருந்த வெளிவாரி புதிய பாடத்திட்ட பொதுக் கலைமாணி தொடர் தொலைக் கல்விப் பரீட்சைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி வரை இடம்பெறும் என்று அந்தப் பல்கலைக் கழகம் பரீட்சார்த்திகளுக்கு அறிவித்துள்ளது.

இந்தப்பரீட்சைகள் கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகின்றன என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நாட்டில் பரவிய ஒருவகைக் காய்ச்சல் மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மண்சரிவு, வெள்ளம் என்பனவற்றால் பிற்போடப்பட்டிருந்தன.

ஏப்ரல் மாதம் இடம் பெறவிருந்த பொதுக்கலைமாணி பட்டப்பரீட்சைக்கான அனைத்து மாணவர்களும் ஓகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியானவர்களாகக் கொள்ளப்படுவார்கள்.

அதேவேளை, ஏப்ரல் மாதம் நடத்தப்பட இருந்த பரீட்சைக்கு அனுப்பிவைக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் புதிய அனுமதிப்பத்திரம் அனுப்ப ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் பிரதிப் பதிவாளர் ஆர்.வி.எஸ். ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

தொடர் தொலைக்கல்வி நிலையத்தால் ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட இருக்கின்ற மேற்படி பரீட்சைகள் நாடெங்கிலும் வெவ்வேறு பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்காக ஏற்கெனவே பணம் செலுத்தியவர்கள் மீண்டும் பணம் செலுத்தத் தேவையில்லை என்றும் பரீட்சையிலிருந்து விலகிக் கொள்வதாக வேண்டுகோள்களை முன்வைத்த, அதேபோல் பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்பத்தவறிய மாணவர்கள் 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடத்தப்படவுள்ள பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான நேரசூசி, பரீட்சை மத்தியஸ்தானம் என்பன சுட்டிலக்கத்துக்கேற்ப www.pdn.ac.lk/cdce ஊடாக தெரியப்படுத்தப்படும் என்று பேராதனைப் பல்கலைக்கழக தொடர்தொலைக்கல்வி நிலையத்தின் பிரதிப் பதிவாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வவு.பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் சிரமதானம்



வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழகமும் சமூக ஆர்வலர்களும் இணைந்து வவுனியாவில் சிரமதானப் பணியை முன்னெடுத்தனர்.

நாட்டில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இறந்தும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டும் வரும் நிலையில் இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு முழுநாள் சிரமதானத்தை முன்னெடுத்த பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழகம், குட்செட் வீதி, ரயில் நிலைய வீதி என்பவற்றில் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (எ-100)

# புதிய அரசமைப்பு ஏன் அவசியம்?



அங்கம்- 03



பேராசிரியர்
நவரத்ன பண்டார

(நேற்றைய தொடர்ச்சி...)

**சட்டத்தின் ஆட்சி**

1978 அரசமைப்பின் கீழ் ஆட்சி செய்யும் நபர் அல்லது நிறைவேற்று ஜனாதிபதி சட்டத்துக்கு மேல் இருப்பவராகவே கருதப்படுகிறார். ஜனாதிபதி மேற்கொள்ளும் நிறைவேற்று நடவடிக்கைகள் மாத்திரமல்லாது, தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளும் ஒரு செயற்பாட்டுக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது. ஆட்சியாளர் சட்டத்துக்கு மேல் இருப்பின் அங்கு சட்டத்தின் ஆட்சி இல்லை. சட்டத்தின் ஆட்சி இல்லாதுவிடின் அதனை ஜனநாயகம் என்றும் அழைக்கவும் முடியாது. ஜனநாயகம் என்பது சட்டத்தின் ஆட்சியாகும்.

அமெரிக்க ஐக்கியக் குடியரசின் அரசமைப்பு 200 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்தது. மிகச் சிறு ஆவணமாகிய அதனைத் தயாரிக்கும்போது கருத்துச் சேகரித்த தோமஸ் பென் பின்வருமாறு குறிப்பிட்டார். எமக்கு ஓர் அரசர் இருந்தார். தற்போது நாம் அந்த அரசனை நீக்கி புதிய ஆட்சியை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். சட்டம் என்ற அரசனை உருவாக்குவதற்கே முயற்சிக்கிறோம். அதன் பின்னர் சட்டமே அரசன். அரசாங்கம் என்னும் விலங்கை உருவாக்குவதையே அரசமைப்பு மூலம் மேற்கொள்கின்றோம். இதற்கமைய அரசமைப்பு அரசாங்கத்தை அமைக்குமேயொழிய அரசாங்கத்தால் அரசமைப்பை உருவாக்க முடியாது. அரசமைப்பை மக்களே உருவாக்க வேண்டும். மேற்படி அரசமைப்பின் மூலம் அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும். ஆனால், இன்று அதன் மறுபுறத்திற்குச் செல்வதையே நாம் செய்யவேண்டி உள்ளது. அந்த அரசாங்கத்தின்மூலம் அரசமைப்பு தயாரிக்கப்படுகிறது.

அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்கள் மற்றும் எதிர்காலத்தில் அரசியல் அதிகாரத்தை அடைய எதிர்பார்ப்போர் தற்போது அரசமைப்பை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்துள்ளனர். எனது அதிகாரம் பேணப்படுமா? எனக்கு அதிகாரம் கிடைக்குமா? ஏற்கனவே இருக்கக்கூடிய அதிகாரத்தை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியுமா? என்ற சிந்தனையிலேயே அவர்கள் அரசமைப் பைத் தயாரிக்கின்றனர். இன்னுமொரு தவணை ஜனாதிபதி பதவியில் நான் இருக்க முடியுமா? அவர் மீண்டுமொரு முறை ஜனாதிபதியாவாரா? எங்களது கட்சியினருக்கு எத்தனை தேர்தல் தொகுதிகளை அதிகரித்துக்கொள்ள முடியும் என்ற அணுகுமுறையையே அவர்கள் அனுசரிக்கின்றனர்.

ஆகவே, நாம் எதிர்பார்க்கும் வகையில் அரசமைப்பை தயாரிப்பதுபற்றி அதிக நம்பிக்கை கொண்டிருக்க முடியாது. அரச மைப்பு என்பது அதிகாரம் கொண்டோர் மற்றும் எதிர்காலத்தில் அதிகாரத்தைப் பெற உத்தேசிப்போரின் எதிர்பார்ப்புக்களுக்கமைய உருவாக்கப்படும் ஓர் இணக்கப்பாடு என நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால், இச்செயல்முறை தவறானதெனக் கூறமுடியாது. ஏனெனில் அதன்மூலம் தற்போதைய நிலைமையை மேலும் சிறந்ததாக உருவாக்கக்கூடிய வகையிலான கலந்துரையாடல் உருவாக்கப்படலாம்.

மக்கள் இந்தச் செயற்பாடு மீது காட்டும் அழுத்தத்தின் மூலமே இதன் முக்கியத்துவம் தங்கியுள்ளது. பிரஜைகளாகிய எமக்கு நியாயம் பெறக்கூடிய சமாதானத்துடன் வாழக்கூடிய ஒரு சூழல் உருவாகும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும். அதில் உள்ளடக்கப்பட வேண்டிய பண்புகள் எவை? எமக்கு வாக்களிக்கும் அதிகாரம் எவ்வாறு கிடைக்கிறது? எமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும்போது சிறந்த நபர்களைத் தெரிவு செய்வதற்கு இதன்மூலம் வாய்ப்புக் கிட்டுமா? என்ற விடயங்களையிட்டே எமது கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தற்போது நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருப்போரில் அதிக எண்ணிக்கையினர் க.பொ.த.சாதாரண பரீட்சையில்கூட சித்தியடையாதவர்களாகவே இருக்கின்றனர் என்ற கருத்தாடல் சமூகத்தில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. ஆனால், என்னைப் பொறுத்தவரை ஒருவருடைய கல்வித் தகைமை பற்றிய இந்த அளவுகோல் அவ்வளவு சிறந்ததென நான் கருத வில்லை. ஏனெனில், க.பொ.த. சாதாரண தரத் தகுதி இல்லாதவர்கள் மாத்திரமல்ல, கலாநிதிப்பட்டம் உடையோர் மற்றும் நிருவாகம் அல்லது பொறியியல்துறையில் பட்டம் பெற்றோர் பாராளுமன்றத்தில் இருந்தாலும், அவர்கள்கூட ஒரு புதிய விடயத்தை நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளவில்லை. கல்வியைவிட மனிதநேயமே இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. கல்வி என்பது இதுவேயாகும். பரீட்சைகளில் சித்தியடைவதல்ல. கற்றறிதலும் மனிதத் தன்மையும் ஒன்றாகப் பயணிக்க மாட்டாது.

கற்றறிவுடைய ஆனால் மனிதத் தன்மையைக்கற்றறியாத பல கல்விமான்கள் இருப்பதை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன்.

நான் அறிந்த மட்டில் டீ.எஸ்.சேனாநாயக்க ஒரு பட்டதாரி அல்லர். ஆனால், அவர் ஒரு மோசமான ஆட்சியாளராக இருக்கவில்லை. திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க எந்தப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தார்? அவர் மோசமான ஆட்சியாளராகத் திகழ்ந்தாரா?



உண்மையில் கல்வித் தகைமை ஓர் ஆட்சியாளரைப் பொறுத்தவரை தீர்மானகரமான விடயமல்ல. இதற்கு ஏராளமான உதாரணங்கள் உண்டு.

> புதிய அரசமைப்பு உருவாகுமா? இல்லையா? என்பது பற்றி பல்வேறு நபர்களுக்கு பல சந்தேகங்கள் உள்ளன. இவற்றைப் பொருட்படுத்தாமல் மக்களுக்குச் சார்பான சிறந்த அரசமைப்பை நாடு உருவாக்கிக் கொள்ளும் வரை இதுவிடயம் தொடர்பான கலந்துரையாடலை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

1931 ஆம் ஆண்டின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வஜன வாக்கு ரிமை ஏற்படுத்திய மாற்றத்தின் அடிப்படை கல்வித் தகைமை ஆட்சி முறையில் தனிநபர்களை நியமிக்கும் முன்னணி அளவுகோலாக அமையக் கூடாதென்பதாகும். 1931 வரை கல்வித் தகைமையை மாத்திரம் கவனத்திற்கொண்ட ஒரு முறைமையே இருந்து வந்தது. அன்று ஆங்கிலம் பேசத் தெரிந்த, வாசிக்கத்தெரிந்த, எழுதத் தெரிந்த நபர்கள் மாத்திரமே தேர்தலில் போட்டியிட முடியும். பின்னர் இந்நிலைமையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

எனவே, நாம் மீண்டும் பின்னோக்கிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. தகுதியான நபர்களை தெரிவு செய்வதற்கு அவசியமான அறிவு மக்களுக்கு (வாக்காளர்களுக்கு) இருத்தல் வேண் டும். தற்போதைய தேர்தல்முறை மக்களை பலவீனப்படுத்தி தலைமைக்கு அவசியமான பலம் வாய்ந்தோருக்கு வெட்கமும், அச்சமுமில்லாதோர் முன்வரக் கூடிய



வாய்ப்புக்களை வழங்குவதையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. மக்களுக்கு வலுவூட்டும் புதிய தேர்தல் முறைமைக்கான புதிய அரசமைப்பு அவசியமில்லையா?

புதிய அரசமைப்பு உருவாகுமா? இல்லையா? என்பதுபற்றி பல்வேறு நபர்களுக்கு பல சந்தேகங்கள் உள்ளன. இவற்றைப் பொருட்படுத்தாமல் மக்களுக்குச் சார்பான சிறந்த அரசமைப்பை நாடு உருவாக்கிக் கொள்ளும்வரை இதுவிடயம் தொடர்பான கலந்துரையாடலை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதேசமயம், 1977 இல், இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன்னர்நாம் அனுசரித்த அணுகுமுறையை பின்னர் ஏற்பட்ட நிலைமைகளோடு மீள சிந்தித்து முன்னேற வேண்டும்.

தனது அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடனேயே இற்றைக்கு 38 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்கனவே கூறியபடி 1978 அரசமைப்பு உருவாக்கப்பட்டது. திறந்த பொருளாதாரத்தின்கீழ் ஏற்பட்டுள்ள நடவடிக்கைகள் காரணமாக அரசியல்வாதிகளின் அபிலாசைகள் நிறைவேறும் நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில், தற்போது அரசாங்கத்தின் கருத்திட்டங்கள் பல மில்லியன் ரூபாய் பெறுமதி வாய்ந்தவை. மார்க்ஸ் கூறியவாறு பொருளாதார மாதிரியில் இருந்து உருவாகும் வர்க்கங்களுக்கு மேலதிகமாக அரசியல் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட தற்போது புதிய வர்க்கங்கள் உருவாகி உள்ளன.

அதாவது, கூட்டாக அரசியல் அதிகாரத்தை, அரசியல் முறைமையாக மாற்றிக்கொண்டு, அதன்மூலம் எமக்கு பொருளாதார ரீதியாக சுரண்டும் அரசியல் வர்க்கம் இங்கு உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தின் இறுதி நிதி விளைவாக கருதக்கூடிய பகுதி அவர்களாலேயே சுவீகரிக்கப்பட்டுள்ளது. நாம் மேற்படி வர்க்கத்தை பராமரிக்க வேண்டியுள்ளது. அந்தவர்க்கத்துக்கான அலுவலகங்களையும், வாகனங்களையும் ஏனையவசதிகளையும்வழங்கவேண்டி உள்ளது. இவற்றுக்காக பொதுமக்களின் வளங்களில் இருந்து பல மில்லியன் ரூபாய்களை செலவு செய்யவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

இவை அனைத்தையும் நிருவகிக்க முடியாவிட்டால் அடிப்படை ஜனநாயக நல்லாட்சியைத் தடைசெய்யும் நிலைமைக்கு தீர்வு நாடி ஆரம்பத்தில் இருந்தே உரிய முறையில் எழுதப்பட்ட புதிய அரசமைப்பு நாட்டுக்கு அவசியமாகும். அவ்வாறின்றி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவியை மாத்திரம் இல்லாதொழிக்கும் பட்சத்தில் மேற்படி பதவியின் அதிகாரங்கள் பிரதமரிடம் கையளிக்கப் படும். 1972 அரசமைப்பில் இத்தகைய நிறைவேற்று அதிகாரம்கொண்ட பிரதமர் பதவி மாத்திரமே அன்று இருந்தது. ராணி வழக்கறிஞர்எஸ். நடேசன் நீண்ட காலத்துக்கு முன்னரே எதிர்வுகூறியவாறு நீண்ட காலமாக இலங்கை அரசமைப்பிற்கு அமைய ஆட்சி செய்யப்படவில்லை. அவசரகாலச்சட்டத்தின் கீழேயே ஆட்சி இடம்பெற்றது. பிரதமர் பதவியின் கீழேயே இத்தகைய நிலைமை நிலவியது.

தற்போதைய அரசமைப்பு இன்றைக்குப் பொருத்தமுடையது அல்ல. அபிவிருத்தி என்ற நிலைப்பாட்டில் இருந்து முதலில் ஜனநாயகம் என்ற நிலைப்பாட்டிற்கே நாம் வரவேண்டி உள்ளது. 60 ஆண்டுகளுக்குப் பின்னரும் நாம் தொடர்ந்தும் அபிவிருத்தி அடையும் ஒரு நாடாகவே உள்ளோம்.

கட்டடங்களும், பெருந்தெருக்களும் அமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அவற்றில் வாழும் மனிதர்களுக்கு என்ன நடந்துள்ளது? மிகவும் பலவீனமான அரசியல் கலாசாரம் கொண்ட மனிதர்களையே நாம் அரசியல் ரீதியாக அபிவிருத்தி செய்துள்ளோம். கல்வி சீரழிந்துள்ளது. சிந்தித்து செயற்பட முடியாத மனிதர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். எனவே, இனவாதம், மதவாதம் என்பவற்றிற்கு மிக இலகுவாக அடிபணியக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. அரசியல்வாதிகளும் இதன்மூலம் பயன்பெறும் நிலையே உருவாகியுள்ளது. அபிவிருத்தி இன்மையை அபிவிருத்தி செய்வதையே நாம் செய்துள்ளோம் அல்லவா? (தொடரும்...)




பொன்.வேணு கிருஷ்ணா

## உயர், நடுத்தர-வர்க்கத்தின் எதிர்ப்பு

12. ட்ரம்ப்-எதிர்ப்பு முகாமின் இன்னொரு பாகத்தில், நடுத்தர வர்க்கத்தின் வசதியான பிரிவுகள் வருகின்றன, குடியரசுக் கட்சிக்கான இதன் எதிர்ப்பு, மக்களின் மிக வசதியான 10 சதவீதம் பேருக்குள் இன்னும் கொஞ்சம் சாதகமான விதத்தில் செல்வம் விநியோகிக்க செய்யப்பட வேண்டும் என்பதன் மீது கவனம் குவிந்ததாக இருக்கிறது. வர்க்கப் பிளவுகளைக் காட்டிலும் நிறரீதியான, பால்ரீதியான மற்றும் பாலியல் ரீதியான அடையாளத்தை முன்னிலைப்படுத்து கின்ற பல்வேறு போலி-இடது அமைப்புகள் (அமெரிக்க ஜனநாயக சோசலிஸ்டுகள், சர்வதேச சோசலிஸ்ட் அமைப்பு, சோசலிச மாற்று, பசுமைக் கட்சி) உள்ளிட பிரதானமாக ஜனநாயகக் கட்சியின் சுற்று வட்டத்தில் இயங்குகின்ற பல்வேறு அரசியல் போக்குகளால் இந்த அடுக்கு பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது.

13. ஆளும் வர்க்கத்திடம் இருந்து சுயாதீனமற்று இருப்பது நடுத்தர வர்க்க அரசியலின் குணாம்சமாகும். ஜனநாயகக் கட்சியின் மீது செல்வாக்குச் செலுத்தி, முதலாளித்துவ அமைப்பு முறையில் மேலோட்டமான சீர்திருத்தங்கள் செய்வதற்கு அதன் ஆதரவை வென்றெடுப்பதற்கு இது முனைகிறது. இந்த அரசியல் வெளிக்குள் இருக்கின்ற கூடுதல் இடது-தாராளவாதக் கூறுகள் சமூக சமத்துவமின்மை பற்றிய பிரச்சினைகளைக் குறிப்பிடுகின்ற அதேநேரத்தில், அரை-சீர்திருத்தவாத விண்ணப்பங்களை, மிகவும் கோட்பாடற்ற விதத்தில், ஜனநாயகக் கட்சிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கங்களுக்கும் ஆதரவு கோருவதுடன், ஒன்றுகலக்கின்றன. அவர்களது சலுகைமிக்க பொருளாதார நிலையானது பெருநிறுவன இலாபங்களிலும்பங்குவிலைகளிலுமான வரலாறு காணாத அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்ற உண்மையுடன் இது பிணைந்ததாகும். தொழிலாள வர்க்கத்தின் மீதான ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கத்தை தக்க வைத்துக் கொள்வதுதான் அவர்களது பிரதான அரசியல் செயற்பாடாகும். 2016 தேர்தலில், அவர்கள் வேர்மண்ட் செனட்டரான பேர்னி சாண்டர்ஸின் பிரச்சாரத்தை விளம்பரப்படுத்தினர், அவரோ பரந்துபட்ட சமூக எதிர்ப்பை, வோல் ஸ்ட்ரீட் மற்றும் உளவு முகமைகளது வேட்பாளரான ஹிலாரி கிளிண்டனது பிரசாரத்தின் பின்னால் திருப்பிவிட்டார். இப்போது சாண்டர்ஸ்



அமெரிக்க செனட்டில் ஜனநாயகக் கட்சி குழுவின் ஒரு முன்னிலை உறுப்பினராய் உள்ளார்.

## தொழிலாள வர்க்கத்தின் எதிர்ப்பு

14. மூன்றாவதும் முற்றிலும் மாறுபட்டதுமான மோதல் உருவாகிக் கொண்டிருப்பது- ஆளும் வர்க்கத்திற்கும் வெகுஜனங்களின் பரந்த, பல்வேறு வடிவ சமூகத் துன்பங்களால் பாதிக்கப்படுகின்ற மற்றும் அரசியல் வாழ்க்கையில் இருந்து முற்றிலும் அந்நியப்படுத்தப்பட்டிருக்கின்ற தொழிலாள வர்க்கத்துக்கும் இடையிலானதாகும்.

15. அமெரிக்காவில் சமூக நெருக்கடியின் யதார்த்தம் தொழிலாள வர்க்கத்தில் எண்ணிலட்டங்கா எதிர்ப்பு மற்றும் கிளர்ச்சி வடிவங்களுக்கான புறநிலை அடித்தளமாக இருக்கிறது. ஒபாமா நிர்வாகம் அது அதிகாரத்தை விட்டு அகன்ற சமயத்தில், அமெரிக் காவில் வாழ்க்கை முன்னொருபோதும் இருந்திராத அளவுக்கு மேம்பட்டதாய் இருந்ததாகக் கூறிக்கொண்டபோதிலும் கூட, உண்மையான வேலைவாய்ப்பின்மை விகிதமோ 8.6 சதவீதமாய் இருக்கிறது, ஊதியங்கள்தேங்கியிருக்கின்றன, தொழிலாளர்கள் கொடூரமான வேலை நிலைமைகளுக்கும் தீவிரமடையும் சுரண்டலுக்கும் முகம்கொடுக்கின்



றனர். வருவாயில் பெருநிறுவன இலாபங்களின் பங்கு, வரலாறு கண்டிராத அளவுக்கான உச்சநிலையில் இருக்க, வருவாயில் உழைப்புக்கு செல்லும் பங்கு வரலாறு கண்டிராத பாதாள நிலைகளில் இருக்கிறது.

16. ஆரோக்கிய பராமரிப்பு நெருக்கடி தீவிரமாக இருக்கிறது, மேலும் மோசமடைந்து சென்று கொண்டிருக்கிறது. ஒபாமாகேர் திட்டம் பெருநிறுவனங்கள் சுகாதார பராமரிப்பு செலவை அவற்றின் தொழிலாளர்களுக்கு மாற்றி விடுகின்ற முனைப்பை மேலும் தீவிரமாக்கியிருக்கிறது. தேசிய சுகாதார பராமரிப்பு தேய்ந்து செல்வதுடன், மருந்து தொற்றுகளின் சுழற்சியும் சேர்ந்து, இறப்பு விகிதங்களின் அதிகரிப்புக்கும்எதிர்பார்ப்பு ஆயுள்காலத்தின் வீழ்ச்சிக்கும் இட்டுச்சென்றிருக்கிறது. வயதான தொழிலாளர்கள் அவர்கள் ஓய்வுபெற்று விட்டால் வருமானம் பற்றாக்குறையாகி விடும் என்பதால் நீண்ட காலத்திற்கு வேலை செய்கின்றனர், இளம் தொழிலாளர்கள் சகிக்க முடியாத அளவுக்கான மாணவர் கடனின் சுமையைப் பெற்றுள்ளனர்.

17. அமெரிக்க மக்களின் ஒரு சிறு அடுக்கின் ஏகபோகமாகியிருக்கும் செல்வம் பெருவாரியான மக்களுக்கு கற்பனைக்கும் எட்டாததாய் இருக்கிறது. பொருளாதார அறிஞர் Branko Milanovic உலகளாவியசமத்துவமின்மை என்ற தனது சமீபத்தில் வெளியாகியிருக்கும் புத்தகத்தில், அநேகம் பேருக்கு ஒரு பில்லியன் டொலர் என்பதன் அர்த்தம் என்பதும் கூட விளங்க முடியாதிருக்கிறது என்று குறிப்பிட்டார். அத்தகையதொரு செல்வ அளவின் பரிமாணத்தை விளங்கப்படுத்து வதற்காக, அவர், ஒரு மில்லியன் டொலர் உள்ள ஒரு மனிதர், தினந்தோறும் ஆயிரம் டொலர்களை செலவழித்தால், மூன்று வருடங்களுக்குள்ளாக அவருடைய செல்வம் மறைந்து போகும். ஒரு பில்லியனர், அதே விகிதத்தில் செலவிட்டால், அவருக்கு 2,700 வருடங்கள் வரை செலவிட முடியும்! என்பதை விளக்குகிறார்.

18. இப்போது மேலேயிருக்கின்ற 1 சதவீத குடும்பங்களிடம் இருக்கின்ற அளவுக்கான செல்வம்தான் கிட்டத்தட்ட கீழேயிருக்கின்ற 90 சதவீத குடும்பங்களிடம் இருக்கிறது. கீழிருக்கும் பாதி மக்கள்தொகையிடம் இருக்கும் அளவுக்கான செல்வம் 20 தனிநபர்களிடம் இருக்கிறது. அமெரிக்காவில் 40 சதவீத குடும்பங்களில் செல்வம் பூச்சியமாகவோ அல்லது எதிர்மறையாகவோ -அதாவது சொத்தைக் காட்டிலும் கடன் அதிகமாக இருக்கும் நிலை- இருக்கிறது. செல்வம்படைத்தவர்களில் 0.1 சதவீதம் பேர் மற்றும் மக்கள் தொகையில் 0.01 பேர் தங்களது சொந்த அரசியல் காலநிலை பாதுகாப்பு அமைப்பாகச் செயற்படுகிறார்கள், தேர்தல்களை வாங்குவதற்கு, அரசியல் வாதிகளுக்குக் கையூட்டு அளிப்பதற்கு மற்றும் அரசியல் நிகழ்முறையைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்களிடம் மிகப்பரந்த அளவுக்கான பணம் இருக்கிறது.

## தொழிலாள வர்க்கத்தின் அரசியல் மூலோபாயம்

19. வாழ்க்கை நிலைமைகள் சகிக்க முடியாததாக ஆகிக் கொண்டிருக்கின்ற தொழிலாள வர்க்கத்தின் பரந்த பிரிவுகள் இடையே சமூக கோபம் பெருகிச் செல்வதன் பல அறிகுறிகள் தென்படுகின்றன. வரம் பற்ற வாய்ப்புகளைக் கொண்ட மண், அமெரிக்கக் கனவு போன்று கடந்த காலத்தில் அமெரிக்காவில் வாழும் வாழ்க்கையை விவரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட சொல்லாடல்கள் எல்லாம் அர்த்தமற்றவையாக ஆகிவிட்டிருக்கின்றன, ஏனென்றால், அவை யதார்த்தத்துக்கு சம்பந்தமற்றவையாக இருக்கின்றன. இருக்கின்ற சமூகம் ஏற்கனவே பெரும் செல்வச்செழிப்புடன் இருக்கின்றவர்களின்நலன்களுக்காகவே பிரத்யேகமாக சேவைசெய்கிறது என்பது உழைக்கும் பரந்த எண்ணிக்கையிலான மக்களுக்கு மேலும் மேலும் வெட்டவெளிச்சமாகி வருகிறது. உயர்தரக் கல்வி, ஒரு பாதுகாப்பான சுற்றுச்சூழல், கண்ணியமான வீட்டு வசதி, பாதுகாப்பான வேலை, போதுமான ஓய்வு நேரம், கட்டுப்படியாகும் மருத்துவப் பராமரிப்பு போன்ற வாழ்க்கையின் அடிப்படை அத்தியாவசியங்களுக்கான அணுகல் என்பது பிறப்பால் தீர்மானிக்கப்படுவதாக இருக்கிறது, அதாவது ஒரு மனிதன் எந்தக் குடும்பத்தில் பிறக்கிறானோ அந்தக் குடும்பம் இருக்கின்ற வர்க்கத்தையும் பொருளாதார அந்தஸ்தையும் சார்ந்ததாக இருக்கிறது.

20. அமெரிக்காவிற்குள்ளாக தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகள் இடைவிடாது தேய்ந்து செல்கின்றமையும், உலகெங்கிலும் ஆளும் வர்க்கத்தால் நடத்தப்படுகின்ற முடிவற்ற போர்களது அர்த்தமற்ற வன்முறையும் பரந்த மக்களின் சமூக நனவிலான ஓர் ஆழமான மாற்றத்தில் பிரதிபலிக்கின்றன. அரசியல் தலைவர்களும் ஊடகங்களும் முதலாளித்துவத்தின் பெருமைக்கு எப்போதும் போற்றிப் பாடல்கள் பாடுகின்றதான ஒரு நாட்டில், சோசலிசத் தில் ஆர்வமும் ஆதரவும், குறிப்பாக இளைஞர்களிடையே எழுச்சி காண்பதைக் கருத்துக் கணிப்புகள் வெளிப்படுத்துகின்றன.

21. அமெரிக்காவிற்குள் மற்றும் சர்வதேச அளவில் இரண்டிலும் பெருகுகின்ற புறநிலை நெருக்கடியின் நிலைமைகளுடன், பரந்த சமூக நனவு தீவிரப்படுவது சந்திப்பதானது வர்க்கப் போராட்டத்தின் வெடிப்பில் வெளிப்பாடு காணும். வர்க்கப் போராட்டமானது பல தசாப்தங்களாக தொழிற்சங்க அதிகாரத்துவத்தாலும், ஜனநாயகக் கட்சியாலும் மற்றும் அடையாள அரசியலின் பல்வேறு வடிவங்களை முன்னெடுக்கின்ற வசதியான பிரிவுகளாலும் ஒடுக்கப்பட்ட நிலை முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. ஆளும் உயரடுக்கின் சமூக எதிர்ப்புரட்சி அமெரிக்க தொழிலாள வர்க்கத்தின் ஓர் எழுச்சியை எதிர்கொள்ள இருக்கிறது. வேலையிடங்களிலும், சமூகங்களிலும் மற்றும் ஒட்டுமொத்த நகரங்களிலும் சமூக எதிர்ப்பின் பல்வேறு வேறுபட்ட வடிவங்களும் முன்னெப்போதினும் தனித்துவமான தொழிலாள வர்க்க அடையாளத்தையும், முதலாளித்துவ-எதிர்ப்பு நோக்குநிலையையும் சோசலிசத் தன்மையையும் பெறவிருக்கின்றன. தனித்தனியான வேலையிடங்கள் மற்றும் சமூகங்களில் நடக்கும் போராட்டங்கள் தொழிலாள வர்க்கத்தின் பரந்த பிரிவுகளது ஐக்கியப்பட்ட போராட்டமாக உருமாறும்.

22. மேலும், அமெரிக்காவிற்குள்ளான வர்க்கப் போராட்டம் சர்வதேச வர்க்கப் போராட்ட வெடிப்புடன் சந்தித்துக் கொள்ளும்போது அது பேரினவாத தேசியவாதத்தின் பலவீனப்படுத்தும் செல்வாக்கைக் குறைக்கும், அமெரிக்க தொழிலாளர்கள் மத்தியில் ஆழமான ஒரு சர்வதேச வர்க்க ஐக்கிய உணர்வு உருவாக உத்வேகமளிக்கும். சொந்த நாட்டில் சமூக ஒடுக்குமுறைக்கு எதி ரான போராட்டம், அமெரிக்காவின் எல்லைகளுக்கு வெளியில் போருக்கு எதிரான போராட்டம் இரண்டும் ஒரே போராட்டத்தின் இரண்டு பிரிக்கமுடியாத தொடர்புடைய அம்சங்களாய் இருக்கின்றமையைத் தொழிலாள வர்க்கம் காணும்.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

37



## அத்தியாயம் - III

## தமிழ்நாட்டு அகதிகள்

உள்ளே அறைகள் இல்லாத வட்ட வடிவக் கட்டடங்களே இந்தச் சூறாவளிக் காப்பகங்கள். தமிழ்நாடு கிழக்கு கரைநீளம் இவை நிறுவப்பட்டு இருக்கின்றன. கரையோரப் பகுதிகளில் சூறாவளிக் காற்று சீறி அடிக்கும்போது, சுற்றிவர உள்ள கிராமத்தவர்களுக்குக் காப்பிடமாக அமையும் வண்ணம் இவை நிறுவப்பட்டு இருக்கின்றன. இந்திரா காந்தி மறைவுக்குப் பின்னர் 1984 ஆம் ஆண்டிலே தமிழ்நாடு அத்தகைய ஒரு பேரிடரைச் சந்தித்தது. நடுங்கச் செய்யும் இந்த இயற்கையின் சீற்றத்தை நான் நேரிலே கண்டிருந்தேன். இந்தச் சூறாவளி, தனது வழியில் எதிர்பட்ட அனைத்தையும் வேரோடு சாய்த்திருந்தது. இடுப்பளவு ஆழமான அழுக்கு நீரையும் பரவியிருந்தது. சென்னையிலும் அது வீறோடு சீறியடித்துக் கடந்து சென்றிருந்தது. ஆகவே, உறுதியான காப்பகங்கள் தேவை என்பதை நான் புரிந்துகொண்டேன். ஆனால், அவை அவசர கால தரிப்பிடங்களாக இருக்கவே பொருந்தும். சூறாவளியின் போதும் பெருமழையின்போதும் அவை உதவும். ஆனால், அகதிகளை நிரந்தரமாகத் தங்கவைக்க அவை போதுமானவை அல்ல. அந்தக் கட்டடம் ஒன்றுக்குள் நுழைந்தபோது எனது இதயம் உறைந்து போனது. எங்கும் கூட்டம் கூட்டமாக ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. அறைகள் இல்லாத அந்தப் பெருங் கூடத்துக்குள்ளே குறுக்கு மறுக்காக கந்தல்களும் பல வண்ணச் சேலைகளும் கட்டப்பட்டிருந்தன. மனித வாழ்வின் விசித்திரமே இதுதான்! கூட்டாக வாழுமாறு சூழ்நிலை மக்களைப் பொது இடத்தில் தள்ளியபோதும் மக்கள் தங்கள் அடிப்படைச் சமூக அலகை, அதாவது குடும்பத்தை நாடவே முற்படுகிறார்கள். தனிமை காக்க வேண்டும் என்ற பிடி வாதத்தோடு ஒவ்வொரு குடும்பமும், சில அடி நீளம் சில அடி அகலமானதாக இருந்தாலும், தனக்கென ஒரு சிறு பகுதியைப் பிரித்து முடிச்சுப் போட்ட சேலைகளால் வேலிகளாகவும் மேலிருந்து தொங்கும் சேலைகளால் சுவர்களாகவும் அடைத்து, மற்றவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்தியிருந்தது. இந்தத் துணிச் சுவர்களுக்கு உள்ளே ஐந்து, ஆறு,ஏழு, எட்டுப் பேர், இனி முதியவர்கள், புதிதாக திருமணமானவர்கள், பிறந்த குழந்தை இப்படி குடும்பத்தினர் வாழத் துடித்துக் கொண்டிருந்தார்கள். மண்ணெண்ணெய் அடுப்பிலிருந்தும், விறகு அடுப்பிலிருந்தும் புகையும் தீச்சுவாலையும் அந்த இடத்தை ஆபத்தானதாக – உடல் நலக்கேடானதாக – ஆக்கியிருந்தது. மக்களோடு உரையாடி இடத்தைச் சுற்றிப் பார்க்க முற்பட்டதும் அங்கே இருப்பவர்களுக்குப் போதுமான உணவு கிடைக்கவில்லை என்று கண்டு கொண்டேன். குழந்தைகள், உப்பிய வயிறோடு, எலும்பும் தோலுமான கை, காலோடு, செம்பட்டை பற்றிய கூந்தலோடு எங்கும் காணப்பட்டார்கள். அதுவே பொது நியதியாக இருந்தது. காரணம் பாலோ, பால் மாவோ அங்கு கிடைப்பது அரிது. பால் இல்லாத தேநீரில் சிறிது சீனி கலந்து, அல்லது சோறுவடித்த கஞ்சியையே தாய்மார் பாலர்க்கு ஊட்டினார்கள். இருமல், தடிமல், ஒழுகும் நாசி, காய்ச்சல், சொறி, வயிற்றோட்டம் ஆகியவை உடல் நலப் பிரச்சினைகளாக இருந்தன. ஆனால், அங்கே மருந்து இருக்கவில்லை.

இந்த மனித அவலத்தைப் பார்க்கும் போது குற்ற உணர்வும் ஆற்றாமையும் என்னைப் பற்றிக் கொண்டன. நானும் அவர்களோடு ஒருவராக இல்லையே என்ற குற்றவுணர்வு; அவர்களுக்குக் கொடுக்க என்னிடம் எதுவும் இல்லையே என்ற ஆற்றாமை உணர்வு. அதேநேரம் அடக்க உணர்வும் என்னை ஆட்கொண்டது. இந்த உணர்வை, இந்தியாவிலும், இலங்கையிலும் நான் வாழ்ந்த அந்த நீண்ட காலப் பகுதியில் பல தடவை அனுபவித்திருக்கிறேன். இவ்வளவு வறுமைக்கும் துயரத்துக்கும் மத்தியில் கூட, இந்த மக்கள் எப்படித் தமது மனிதத்துவத்தைப் பேணுகிறார்கள் என்பதும், தங்கள் கண்ணியத்தையும் மரியாதை காட்டும் பண்பையும் காப்பாற்றுவதில் எவ்வளவு கருத்தாக இருக்கிறார்கள் என்பதும் என்னை மலைக்க வைத்திருக்கின்றன. இந்தத் தடவை, பொருள் தட்டுப்பாட்டையே எங்கும் காண முடிந்தது என்றாலும், தமிழ் விருந்தோம்பலும் தாராள மனப்பான்மையும் அவர்களிடமிருந்து பீறிட்டு வெளியே வந்தன. சீனித் தட்டுப்பாடு நிலவிய போதிலும் தித்திப்பான தேநீரோடு எம்மை உபசரித்தார்கள். யாரோ, அன்று தமது பங்கை எமக்கு மனமுவந்து கொடை புரிந்துவிட்டு, தாம் வயிறு காய்ந்து இருப்பார்.

இந்த மனித அவலத்தை ஒரு கட்டுரை வடிவிலே செய்தித் தாளுக்கு எழுதுவது எனக்கு வெகு இலகுவாக இருந்தது. ஆனால், மனதை உருக வைத்த அந்த அவலக் காட்சிகளை நெஞ்சில் இருந்து நீக்குவது இலகுவாக இருக்கவில்லை. ஏனென்றால், மிக மோசமான நிலையிலேயே அந்த மக்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். பச்சைப் பாலரில் நான் கண்ட நோய் அறிகுறிகள் எனக்குக் கவலை அளித்தன. நாம் எந்த மக்களுக்காகப் போராடுகிறோமோ அவர்களில் இந்த அகதிகளும் ஒரு பகுதியே. ஆகவே, இந்தப் பிரச்சினையை ஒதுக்கி விட்டு அப்பால் நகர எனக்கு இயலவில்லை. ஒரு விடுதலை இயக்கம், அரசியல் இராணுவ முனைகளில் நின்று போராட்டம் நடத்துவதுபோல, தான் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்களின் நலன்கள் மீது அக்கறை எடுக்கவும் கடமைப்பட்டிருக்கின்றது. இயக்கத்தின் செலவுகளை நிர்வகிக்கும் போது நுணுக்கமாக் கணக்குப் பார்த்துத்தான் பிரபாகரன் செலவை கட்டப்படுத்தி வைத்திருப்பது எனக்குத் தெரியும். ஆனாலும் எனக்காக 5000 ரூபா சிறு தொகையை ஒதுக்கித் தர அவர் மறுக்கமாட்டார் என்பதும் எனக்குத் தெரியும். எனவே,அவர் எங்களைப் பார்க்கவந்தபோது, பிரச்சினையை அவரிடம் எடுத்துக் கூறினேன். இந்த ஒரு முகாமுக்காவது சில உணவுப் பொருள்களும் மருந்தும் வாங்க நிதி உதவி வழங்குமாறு கேட்டேன். அவர் உடனடியாகச் சம்மதித்தார். மட்டக்களப்புச் சிறையிலிருந்து தப்பி வந்த மருத்துவர் ஜெயகுலராஜா, அகதி முகாம்களுக்கு என்னோடு கூடி வந்து நோய் வாய்ப்பட்ட குழந்தைகளைப் பரிசோதிக்க உற்சாகமாக ஒப்புக்கொண்டார். நிதிகள் சேர்ந்தன; நன்கொடைகள் திரண்டன; வேலை பெருகியது. எங்கள் குழு தமிழ் நாடு முழுவதும் உள்ள அகதி முகாம்களைத் தரிசித்தது. இறுதியில் எமது பணியை ஓர் ஒழுங்கமைப்புக்குள் கொண்டு வரத் தீர்மானித்தோம். அந்த அமைப்புக்கான யாப்பை பாலா எழுதினார். எமது பணி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்ற பெயரில் அறக்கொடை அமைப்பாகப் பதிவாகியது. தமிழ் நாட்டில் உள்ள ஆயிரமாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவி புரிவதே கழகத்தின் நோக்கம் ஆகியது. மருத்துவர் ஜெயக்குலராஜா கழகத்தின் தீவிர தொண்டர் ஆனார். காலம் செல்ல, நிர்வாகம், திட்மிடல், திட்ட நடைமுறை ஆகியவற்றின் பொறுப்புகள் மற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இப்பொழுது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒரு வலுவான அமைப்பாக வளர்ந்து விட்டது. தனித்து இயங்கும் அறக்கொடை அமைப்பாகச் செயற்படுகிறது. இலங்கை வடக்கு – கிழக்கில் தங்கள் தாயகத்திலேயே வீடு வாசல் இழந்து இடம் பெயர்ந்த ஆயிரம் ஆயிரம் தமிழ் மக்களுக்கு பல வகை உதவிகளைப் புரிந்து கொண்டு இருக்கிறது.

இந்தியா பல புதிர்களையும் முரண்பாடுகளையும் கொண்ட நாடு. இந்திய சமூக வாழ்க்கை தொடர்பாக, வெளியாரைத் திகைக்க வைக்கும் மிகவும் புதிரான முரண்பாடு என்னவென்றால், பணக்காரருக்கும் ஏழைகளுக்கும் இடையேயுள்ள பெரிய ஏற்றத்தாழ்வே. இந்தியாவில் இனி இல்லை என்ற பணக்காரர் ஒரு புறம்; படுமோசமான ஏழைகள் மறுபுறம். எதிரும் புதிருமான இந்தப் படுகேடான வேறுபாட்டுக்கு நடுவே பலம் மிக்க நடுத்தர வகுப்புகள். மிக மோசமான வறுமை பற்றிய வர்க்க ஆய்வை நான் இங்கே நடத்தவரவில்லை. இந்தியாவில் ஒப்பற்ற குபேரர் ஒரு புறமும், வறியவரிலும் வறியவர் மறுபுறமும் உள்ள ஒரு பயங்கரச் சூழல் நிலவுகிறது என்பதையே அடித்துக் கூற விரும்புகிறேன். இந்தியாவிலே, தமிழ் அகதிகள், நெருக்கியடித்துக் கொண்டு, மனிதாபிமானம் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்வது என்னை வெகுவாகப் பாதித்தது என்பது உண்மையே. ஆனாலும் தமிழ் நாட்டின் வறிய நிலையும் மனதைப் பாதிப்பதே. எனது மனதில் பதிந்த ஒரு சம்பவம், இன்றும் நெருடலாக வருகிறது.

பெசன்ற் நகரில் உள்ள எமது மாடி வீட்டில் இருந்துகொண்டே உலகம் உருள்வதைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். சமூக அநீதியையும் வறுமையையும் நினைவூட்டும் சம்பவம் ஏதாவது கண்முன்னே நடந்து கொண்டே இருக்கும். ஒரு நாள் மாலை சோம்பலோடு, சிந்தனையில் ஆழ்ந்தபடியே ஜன்னலருகே நின்று வெளியே பார்த்துக் கொண்டு நின்றேன். தூரத்தில் ஓர் ஒட்டி உலர்ந்த உருவம் நடைபாதையில் தள்ளாடியபடியே நகர்ந்து கொண்டிருந்தது. உருவம் கிட்ட வர, முப்பது வயது மதிக்கக்கூடிய ஓர் இளைஞனை அடையாளம் காண முடிந்தது. வாரப்படாத நீண்ட தலைமுடி. விலா எலும்புகள், ஒட்டிய தோலில் புடைத்துக் கொண்டிருந்தன. மெலிந்த நீண்ட முடியுடைய தோற்றம், நிழற்படங்களிலும் கோவில்களிலும் பார்க்கும் யேசு கிறிஸ்துவின் சிலையைப் பார்க்கும் ஞாபகத்தை ஏற்படுத்தியது. வீதியில் வழி வழியே நிறுத்தி வைக்கப்பட்ட பீப்பா போன்ற குப்பைத் தொட்டிக்கு அருகே அவன் அடிக்கடி நிற்பதை உணர்ந்தேன். நல்ல தெளிவாகப் பார்க்க முடிந்தபோது, அந்தக் குப்பைத் தொட்டிகளில் வீசப்பட்ட எச்சில் உணவை அவன் தேடுவதைக் கண்டேன். குப்பைத் தொட்டிகளில் மனிதர் எச்சில் உணவு தேடுவது இந்தியாவில் புதுமை அல்ல. ஆனால், நான் அங்கே பார்த்துக் கொண்டிருக்கும் காட்சி எனது மனதைவிட்டு அகலவேயில்லை. அந்த இளைஞன், கடைசியாக எங்கள் மாடிக்கு அருகே உள்ள குப்பைத் தொட்டியை நோக்கி நகர்ந்தான். அதேநேரம் வேறு புறத்திலிருந்து ஒரு பசுவும் மேய்ந்தபடி அங்கே வந்தது. இருவரும் ஒரே ரேத்தில் அந்தக் குப்பைத் தொட்டியை அடைந்தார்கள். அங்கே நாற்றம் எடுத்துக் கொண்டிருக்கும் அழுகலை இருவரும் பகிர்ந்து உண்டார்கள். குப்பைக்குள் இருந்து கிளறி எடுத்த உணவு மீதங்களை அந்த இளைஞன் கடித்துக் கொண்டிருக்க, தொட்டியின் மறுபுறத்தில் அந்தப் பசு தனது வாயில் அகப்பட்டதை மென்று கொண்டிருந்து.வறுமையின் கொடுமையாக கையறு நிலையாக, மானிட அவமதிப்பாக, இந்தக் காட்சி எனது மனதை இன்றும் குடைகிறது.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# வரலாற்றில் ஒரு நாயகன் நெல்சன் மண்டேலா!




நெல்சன் மண்டேலாவின் 99 ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

உலக வரலாற்றில் சுதந்திர போராட்டம் என்பதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று சம உரிமைக்காகவும், சமத்துவத்துக்காகவும் வேண்டி மேற்கொள்ளப்படும் சுதந்திர போராட்டம். மற்றொன்று அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டு சொந்த ஆட்சி அமைக்க வேண்டி மேற்கொள்ளப்படும் சுதந்திர போராட்டம். இந்த இரண்டு வகை சுதந்திரத்துக்காகவும் தங்கள் உயிரையும் துச்சமாக மதித்து போராடியவர்கள் ஏராளம்.

அவர்களில் மூவரின் பெயர்களை இருபதாம் நூற்றாண்டு வரலாறு பொன் எழுத்துகளால் பொறித்து வைத்திருக்கிறது. ஒருவர் இந்தியாவில் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியை ஒழித்து இந்திய மண் சுதந்திர காற்றை சுவாசிக்க வழி வகுத்து தந்த அண்ணல் காந்தியடிகள். அடுத்தவர் அமெரிக்காவில் நிறவெறி ஒழிய தன் உயிரை பரிசாகத் தந்த மார்ட்டின் லூதர் கிங். இருபதாம் நூற்றாண்டு வரலாறு நினைவில் வைத்திருக்கும் மூன்றாமவர் நெல்சன் மண்டேலா.

அவர்தான் நவீன இருபதாம் நூற்றாண்டில்கூட இன ஒதுக்கல் என்ற அசிங்கத்தால் இருண்டு போயிருந்த தென்னாபிரிக்காவில் விடிவெள்ளியாக உதித்து அந்த மண்ணின் மைந்தர்களான கறுப்பினத்தவர்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த ஒப்பற்ற தலைவர் நெல்சன் மண்டேலா (Nelson Mandela). தன் கொள்கைக்காக 27 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த ஒருவர் ஒரு தேசத்தின் அதிபரான கதைதான் நெல்சன் மண்டேலாவின் கதை.

1918 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் நாள் தென்னாபிரிக்காவின் ட்ரான்ஸ்கிய (Transkei) என்ற பகுதியில் தெம்பு (Thembu) இனத் தலைவருக்கு மகனாக பிறந்தார் நெல்சன் மண்டேலா. ஆரம்பம் முதலே அவரது வாழ்க்கை முட்புதர்கள் நிறைந்த ஒன்றாகத்தான் இருந்தது.

சொந்த மண்ணில் தம் மக்கள் அடிமைப்படுத்தப்படுவதையும், கேவலமாக நடத்தப்படுவதையும் பார்த்து சிறுபான்மை வெள்ளை இனத்தவரின் ஆதிக்கத்தை தகர்க்க வேண்டும் என்ற உணர்வு அவருக்கு சிறுவயதிலிருந்தே மனத்தில் பதிந்தது. போர்ட் ஹரே (Fort Hare) பல்கலைக் கழகத்தில் மாணவராக இருந்தபோது ஒருமுறை மாணவர்களின் போராட்டத்துக்கு தலைமை தாங்கியமைக்காக அவர் அந்தக் கல்வி நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

ஆனால், நெல்சன் மண்டேலா கல்வியை கைவிடவில்லை. வித்வோட்டர்சரண்ட் (Witwatersrand) என்ற பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சட்டத்துறையில் பட்டம் பெற்றார். பின்னர் வோல்டர் சிசுலு என்ற நண்பருடன் இணைந்து தென்னாபிரிக்காவின் கறுப்பின முதல் சட்ட நிறுவனத்தை தொடங்கினார். நெல்சன் மண்டேலா பிறந்தபோது தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் அதன் உச்சத்தில் இருந்தது. தொன்று தொட்டு கறுப்பர்கள்தான் தென்னாபிரிக்க மண்ணுக்கு சொந்தக்காரர்கள்.

பதினேழாம் நூற்றாண்டில் அங்கு வந்து குடியேறிய பிரெஞ்சு டச்சு நாட்டவர்களையும், ஆங்கிலேயர்களையும் வரவேற்றது தென்னாபிரிக்க மண். எண்ணிக்கை பெருக பெருக அதிகாரத்தைக் கைப்பற்றி கறுப்பினத்தவர்களைக் கொத்தடிமைகளாக நடத்த எத்தனித்தனர் விருந்தினர்களாக வந்த வெள்ளையர்கள்.

தென்னாபிரிக்காவின் மக்கள் தொகையில் எண்பது விகிதமாக இருந்த கறுப்பர்களுக்கு வெள்ளையர்கள் ஒதுக்கிக் கொடுத்த நிலப்பரப்பு எவ்வளவு தெரியுமா? வெறும் பதின்மூன்று விகிதங்கள் மட்டுமே. வெள்ளையர்களுக்கென்று தனி பள்ளிக்கூடங்கள், நூலகங்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள், கட்டடங்கள். அங்கே கறுப்பினத்தவர்களுக்கு அனுமதிகிடையாது. வெள்ளையர்கள் வாழும் பகுதியில் நடப்பதற்குகூட அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இப்படிப்பட்ட கொடுமைகளை எதிர்த்து எண்பது விகிதசாரா மக்களால் போராடியிருக்க முடியாதா? என்று நீங்கள் கேட்கலாம். வெள்ளையர்கள் புத்திசாலிகள் அவர்கள் மொழிகளின் பெயரால் கறுப்பினத்தவர்களை பிரித்து வைத்திருந்தனர். ஆனால் வெள்ளையின ஆதிக்கத்தை எதிர்த்து போராடி வந்தது ஏ.என்.சி எனப்படும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்.

அப்போது கல்லூரி மாணவராக இருந்த நெல்சன் மண்டேலா காங்கிரஸின் இளைஞர் பிரிவைத் தொடங்கினார். மண்டேலாவின் வருகைக்குப் பிறகு இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்தன. 1960 ஆம் ஆண்டு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய கறுப்பினத்தவரின் மீது பொலிஸார் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் 69 பேர் கொல்லப்பட்டமையுடன் இருபதாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். கொதித்தெழுந்த மக்கள் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்த தென்னாபிரிக்க அரசு ஆபிரிக்க தேசிய காங்கிரஸைத் தடை செய்தது.

இனி அகிம்சை வழி பலன் தராது என்று நம்பிய மண்டேலாவும், அவரது நண்பர்களும் ஆயுதம் ஏந்த முடிவெடுத்து ரகசியமாக நாட்டை விட்டு வெளியேறினர். 1962 ஆம் ஆண்டு நாடு திரும்பிய அவரை கைது செய்தது தென்னாபிரிக்க அரசு. ஆவணங்கள் இன்றி நாட்டை விட்டு வெளியேறினார் என்றும், அரசுக்கு எதிராக கலகம் செய்தார் என்றும் கூறி அவருக்கு 1964 ஆம் ஆண்டு ஆயுள் தண்டனை விதித்து ஒரு தீவுச் சிறையில் அடைத்தது தென்னாபிரிக்க அரசு.

அடுத்த 27 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார் மண்டேலா. இனிப் போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டால் விடுதலை செய்வதாக 1973 ஆம் ஆண்டு மற்றும் 1983 ஆம் ஆண்டிலும் தென்னாபிரிக்க அதிபர் கேட்டுக் கொண்ட போதும் அதனை ஏற்க மறுத்து விட்டார் மண்டேலா. அவரது மன உறுதி கறுப்பினத்தவர்களை ஒன்றுபட ஊக்கமூட்டியது. நாடெங்கும் போராட்டங்கள் வெடித்தன.

> 'நம்மை ஒடுக்கியவர்களைப் பார்த்து நாமெல்லாம் தென்னாபிரிக்கர்கள் பழைய ரணங்களை மறந்து ஒன்றாக இணைந்து புதிய தென்னாபிரிக்காவை உருவாக்குவோம், எல்லாக் கட்சிகளின் தலைவர்களுக்கும் நான் நட்புக் கரத்தை நீட்டுகிறேன் இந்த நாட்டை மறு நிர்மாணம் செய்ய உதவுமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்'.

மண்டேலாவை விடுவிக்க கோரி உலக நாடுகளும் தென்னாபிரிக்காவை நெருக்கத் தொடங்கின பணிய மறுக்கவே தென்னாபிரிக்காவின் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தன உலக நாடுகள். உலகமே போர்க்கொடி தூக்கிய பிறகு தமது அட்டூழியங்களை உணர்ந்தது வெள்ளையின சமூகம்.

1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் நாள் அப்போதைய தென்னாபிரிக்க அதிபர் F.W.de Klerk நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்தார். புன்னகையோடு வெளி வந்த அவரை உலகம் அதிசயமாகப் பார்த்தது. தமது வாழ்க்கையின் கால் நூற்றாண்டை நான்கு சுவருக்குள் கழித்த அவரிடம் எந்தவித காழ்ப்புணர்ச்சியோ, வெறுப்புணர்ச்சியோ அறவே இல்லை. அவரது விடுதலைக்குப் பிறகு இன ஒதுக்கல் சட்டங்கள் அனைத்தும் நீக்கப்பட்டன. கறுப்பினத்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின அதிபரானார் நெல்சன் மண்டேலா. அவ்வளவு கொடுமைகளுக்குப் பிறகு அதிபரான அவர் தமது மக்களைப் பார்த்து, ''நம்மை ஒடுக்கியவர்களைப் பார்த்து நாமெல்லாம் தென்னாபிரிக்கர்கள் பழைய ரணங்களை மறந்து ஒன்றாக இணைந்து புதிய தென்னாபிரிக்காவை உருவாக்குவோம், எல்லா கட்சிகளின் தலைவர்களுக்கும் நான் நட்புக் கரத்தை நீட்டுகிறேன் இந்த நாட்டை மீள்நிர்மாணம் செய்ய உதவுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்'' என்று கூறினார்.

தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் என்ற அரக்கன் ஒழிய பாடுபட்ட அவருக்கும், அதிபர் எவ்.டபிள்யூ. டி.க்ளெர்க் அவர்களுக்கும் 1993 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு அவராகவே அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

பல்லாண்டுகள் தனது மக்கள் பட்ட கொடுமைகளையும், 27 ஆண்டுகள் தாம் அனுபவித்த வேதனைகளையும் நினைத்து அதிகாரம் தன் கையில் வந்தவுடன் நெல்சன் மண்டேலா வெள்ளையினத்தவரை பழி வாங்கப் புறப்பட்டிருந்தாலும் நாம் அதற்கு நியாயம் கற்பித்திருக்கலாம். சராசரி மனிதர்களின் இயல்பு அது. ஆனால் சராசரி மனிதனிலிருந்து அவர் உயர்ந்து நிற்கிறார் அதற்குக் காரணம் இந்த பாடல் வரிகள்...

**''மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்க கோயிலப்பா....**

**இதை மறந்தவன் வாழ்வு தடம் தெரியாமல் மறைந்தே போகுமப்பா...''**

இவ்வாறு உலகமே கொண்டாடிய கறுப்பின விடிவெள்ளி 2013 டிசெம்பர் 5 ஆம் நாள் தனது 85 ஆவது வயதில் இம் மண்ணுலகை நீத்தார். நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை நமக்கு பல பாடங்களை தந்தாலும் ஒரு பாடம் உயர்ந்து நிற்கிறது. அது தான் மன்னிப்பு எனும் பாடம். தவறு செய்யும்போது மன்னிப்பு கேட்போருக்கும், தவறு செய்தவர்களை மன்னிக்கத் தெரிந்தோருக்கும் நிச்சயம் எந்த வானமும் வசப்படும். ★



## சிறந்த மகளிருக்கான விருது



இந்த வருடத்தில் சிறந்த மகளிருக்கான தங்கவிருது வெளிநாட்டு வேலைவாய்ப்புஅமைச்சர் திருமதி தலதா அத்துக் கோரளவுக்கு வழங்கப் பட்டுள்ளது.

கொழும்பு தாஜ் சமுத் திரா ஹோட்டலில் சனிக் கிழமைநடைபெற்றஇந்த விருது வழங்கும் நிகழ் வில்வெளிநாட்டுபணியா ளர்களுக்காக இவர் மேற் கொண்ட சேவை மற்றும் அரசியல் ரீதியாக இவர் பெற்றுக்கொண்டவெற்றி உள்ளிட்ட உன்னதமான பணிகளுக்கான பங்க ளிப்பைகருத்தில்கொண்டு International Finance Cooperating மற்றும் Women in Management நிறுவனத்தால்இந்தவிருது வழங்கப்பட்டது. (எ)

# அடிப்படை வசதிகள் இன்றிய நிலையில் வசித்து வருகின்றனர் கறுக்காய்தீவு மக்கள்

## பெரும் சிரமத்தில் 168 குடும்பங்கள்



கிளிநொச்சி, கறுக் காய்த்தீவு கிராமத்துக்கான குடிதண்ணீர், போக்கு வரத்து வசதிகள் உள் ளிட்ட அடிப்படை வசதி கள் இன்மையால் அங்கு வசித்து வரும் 168 குடும் பங்கள் பல்வேறு சிரமங் களை எதிர்கொண்டு வருகின்றன என அந்தப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் கிராம மக்கள் கருத்துத் தெரிவிக் கையில்-

கிளிநொச்சி, பூநகரிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கறுக்காய் தீவு கிராமத்தில் தற்போது 57 வரையான பெண் தலை மைத்துவக் குடும்பங்கள் உள்ளடங்கலாக 168 வரையான குடும் பங்கள் வாழ்ந்து வருகின் றோம்.

இந்நிலையில், எமது கிராமத்துக்கான குடி தண் ணீர் முதற்கொண்டு ஏனைய வசதிகள்வரை எல்லாவற்றையும் வேறு இடங்களில் இருந்தே பெற்றுக்கொள்ள வேண் டிய அவல நிலையில் நாம் வாழ்ந்து வருகின் றோம்.

எமது போக்குவரத்துக் காகக் காணப்படும் தம்பி ராய் சந்தியிலிருந்து கறுக் காய் தீவு வரையான பிர தான வீதி கடந்த பல ஆண்டுகளாக எதுவித புனரமைப்புப் பணிகளும் இன்றி, குன்றும் குழியு மாகக் காணப்படுகின்றது.

அத்துடன், தற்போது சா தாரணமாக சைக்கிள் கூட பயணிக்க முடியாத நிலையில் அந்த வீதி சேதமடைந்து காணப்படு கின்றது.

எனவே, எமது கிராமத் துக்கான பிரதான வீதியை புனரமைத்தல் மற்றும் ஏனைய அடிப்படை வச திகளை பெற்றுத்தரல் போன்ற தேவைகளை பூர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுக்கின் றோம் - என்றனர். (எ)

# கடற்படை அதிகாரி கைது குறித்து சவால் விடுப்போர் முறையிடலாம்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



விசாரணை நடத்தாது எவரும்கைது செய்யப்பட வில்லை என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர்ருவான் குணசேகர தெரிவித்துள் ளார்.

கடற்படையின் முன் னாள் பேச்சாளர் டி.கே.பீ . தசநாயக்க கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளமை தொடர்பில் அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ரீதியான காரணிகளின்அடிப்படை யிலேயே இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டது என்று சுட்டிக்காட்டியுள்ள அவர் இந்த கைது தொடர் பில் சவால் விடுக்கும் தரப்பினர் மனித உரிமை ஆணைக்குழுவில் இது தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பணம்பெற்றுக்கொள் ளும் நோக்கில் கடத்தல் களில் ஈடுபட்டார் என இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில்ஏழுபேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கடத்தல்கள், கப்பம் கோரல்களுடன் கடற்படையினருக்கு எவ் வித தொடர்பும் கிடை யாது. கடற்படையில் பணி யாற்றிய சிலரின் தனிப் பட்ட தேவைகளுக்கு அமைய இந்தச் சம்பவங் கள் இடம் பெற்றுள்ளன.

காணாமல் ஆக்கச் செய்யப்பட்டவர்கள் பயங் கரவாதிகள் அல்லர். சட் டத்தின் முன் முப்படை யினர், பொலிஸார் என வேறுபாடு கிடையாது. -என்றார். (எ)

# கோவணத்துடன் ஆர்ப்பாட்டம்!

## விவசாயிகள் கொழும்பில் நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 18

தேசிய விவசாயிகள் கூட்டமைப்புஎதிர்வரும் 26ஆம் திகதி கொழும் பில் கோவணத்துடன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்குத் தீர் மானித்துள்ளதாக, தேசிய விவசாயிகள் கூட்ட மைப்பு அறிவித்துள்ளது.

விவசாயிகளுக்கான மானியம் மற்றும் இழப் பீடுகள் இல்லாமல் செய் தல், உரமானியத்தை உரிய முறையில் வழங் காமை, அறுவடைக்கு உரிய விலையைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக் காமை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன் னெடுக்கவுள்ளதாக தேசிய விவசாயிகள் கூட்டமைப்பின்ஏற்பாட் டாளர் நாமல் கருணா ரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களை உள்ளடக் கிய நாடளாவிய ரீதியில் உள்ள சகல பிரதேசங் களையும் சேர்ந்த விவ சாயிகளும் பங்கேற்பர்.

கொழும்பு, கோட்டை ரயில்வேநிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்க வுள்ள இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பின் னர், ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவைச் சந்தித்து, மகஜர் ஒன் றையும் கையளிப்ப தற்கும் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு உரிய முறையில் பதிலளிப்ப தற்கு அரசு தவறும் பட் சத்தில், மாவட்ட ரீதியில் தொடர்ச்சியான ஆர்ப் பாட்டங்களை முன் னெடுப்பதற்கும் கலந் தாலோசிக்கப்பட்டுள் ளது.-என்றார். (எ)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது!

அநுராதபுரத்தில் 220 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒரு வர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் - இசுரு முனிய பகுதியில் வைத்து பொலிஸா ரால் அவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர், முன் னதாக போதைப் பொருள் வியா பாரம் தொடர்பில் பிடியாணை பிறப்பிக் கப்பட்ட ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றது அரசு நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை!

கொழும்பு, ஜூலை 18

மாலபே நெவில் பெர் னாண்டோ போதனா வைத் தியசாலையை அரசு உத்தி யோகபூர்வமாக நேற்று பொறுப்பேற்றுக் கொண்டது.

இதற்கான உடன்படிக்கை கையெழுத்திடும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது.



இதனடிப்படையில், இந்தப் போதனா வைத் தியசாலை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து சுயாதீன வைத்திய சாலையாகச் செயற்படும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித் துள்ளார்.

மேலும் வங்கிகளின் மூலம் பெற்றுக் கொண்ட அனைத்துக் கடனையும் செலுத் துவதாக நெவில் பெர்னாண்டோ கூறி யுள்ளார்.

அதன் அடிப்படையிலேயே இந்த வைத்தியசாலையை அரசு பெற்றுக் கொண்டது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# சிறுபோகத்துக்கு மொரகஹகந்த தேக்கத்தில் இருந்து தண்ணீர்!

### வழங்குவதில் எந்தத் தடங்கலும் இல்லை என்கிறது மகாவலி அதிகார சபை



சிறுபோகத்துக்குத் தேவையான நீரை மொரக ஹகந்த நீர்த்தேக்கத்தின் ஊடாக வழங்குவதில் எந்தத் தடங்கலும் இல்லை என்று இலங்கை மகாவலி அதிகார சபை அறிவித்துள்ளது.

போவத்தென்ன நீர்த் தேக்கத்தின் மூலம் தொடர்ந்தும் மகாவலி நீர் மொரகஹகந்த நீர்த் தேக்கத்தில் சேகரிக்கப் படுகின்றது. எனினும், வறட்சியான காலநிலை நிலவுவதால் நீரை சிக் கனமாகப் பயன்படுத் துமாறு மகாவலி அதிகார சபை விவசாய அமைப் புக்களுக்கும் விவசாயிக ளுக்கும் அறிவித்துள் ளது.

இதுதொடர்பில் அதி கார சபை மேலும் தெரி வித்தவை வருமாறு:-

மொரகஹகந்த நீர்த் தேக்கத்தை அண்டிய பகுதியில் கடந்த மழை காலத்தில்சேகரிக்கப்பட்ட மொத்த நீரின் அளவு 14 கோடியே 50 லட்சம் கன மீற்றர்களாகும்.

சிறுபோகத்தின் எதிர் வரும் இரண்டு மாதங்க ளுக்குத் தேவையான நீரை வழங்குவதற்காக தற்போது மொரகஹகந்த நீர்த்தேக்கத்தில் ஆறு கோடி கன மீற்றர்களுக் கும் அதிகமான நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது பயிர்ச் செய் கைக்காக தொடர்ந்து நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

சேகரிக்கப்பட்ட நீரில் கடந்த மே மாதம் முதல் இதுவரை ஒன்பது கோடி 40 லட்சம் கன மீற்றர் நீர் எலஹெர, மின்னேரிய, கிரித்தலை, கவுடுல்ல மற்றும் பராக்கிரம சமுத் திரம் ஆகிய குளங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள் ளன.- எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ)

காலைக்கதிர் Kalaikkathir



# குடியரசுத் தலைவர் தேர்தல் நேற்று; விறுவிறுப்பாக நடந்தது வாக்குப் பதிவு!

புதுவை, ஜூலை 18

இந்தியாவின் 14 ஆவது குடியரசுத் தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தலின் ஒரு பகுதியாக புதுவை சட்டப்பேரவையில் நேற்று விறுவிறுப்பான வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது. காலையிலேயே காங்கிரஸ், அ.தி.மு.க., தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் வாக்களித்துள்ளனர்.



புதுச்சேரியில் காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் வாக்களித்தனர்

தற்போதைய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் பதவிக்காலம் இந்த மாதத்துடன் நிறைவு பெறுகிறது. இதனை அடுத்து புதிய குடியரசுத் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் நேற்று நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது.

பா.ஜ.க. கூட்டணி வேட்பாளராக ராம்நாத் கோவிந்த், காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர் மீராகுமார் ஆகியோர் களம் இறங்கியுள்ளனர்.

குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வாக்குப் பதிவு அனைத்து மாநில சட்டப் பேரவை அலுவலகங்களிலும் நடைபெற உள்ளன.

அதன்படி, புதுச்சேரி சட்டப் பேரவை வளாகத்தில் உள்ள கமிட்டி அறையில் வாக்குச் சாவடி மையம் அமைக்கப்பட்டுள்ளது. வாக்குப் பதிவுக்காக பாதுகாப்பு முன் ஏற்பாடுகள், ஸ்ட்ராங் ரூம், கண்காணிப்பு கமராக்கள் பொருத்துதல் போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஏற்கெனவே, மத்திய பார்வையாளர் அருண் யாதவ், மாநில தலைமை தேர்தல் அதிகாரி டாக்டர் கந்தவேலு தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த நிலையில், சட்டப் பேரவை வளாகம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வெளியார் எவரும் உள்ளே நுழைந்து விடாதபடி 2 அடுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

முற்பகல் 10 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கியது.

காலையில் முதல்வர் நாராயணசாமி, பேரவைத் தலைவர் வைத்திலிங்கம், அமைச்சர்கள் நமச்சிவாயம், கந்தசாமி, மல்லாடி கிருஷ்ணாராவ், கந்தசாமி ஆகியோரும், அன்பழகன் தலைமையில் அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் 4 பேரும், சிவா தலைமையில் தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் இருவரும் வாக்களித்தனர். என்.ஆர். காங்கிரஸ் எம்.எல்.ஏக்களில் திருமுருகன் மட்டும் தனியாக வந்து காலையில் வாக்களித்தார்.

நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் ராதாகிருஷ்ணன், மாநிலங்களவை உறுப்பினர் கோகுலகிருஷ்ணன் இருவரும் டில்லியில் வாக்களித்தனர்.

வாக்குப்பதிவு முடிந்த பின்னர் 'சீல்' வைத்த வாக்குப் பெட்டி பலத்த பாதுகாப்புடன் டில்லிக்கு விமானத்தில் உதவித் தேர்தல் அலுவலரும், பேரவைச் செயலருமான வின்சென்ட் ராயரால் கொண்டு செல்லப்பட்டது.

**பா.ஜ.கவுக்கு அதிக வாக்குகள்?**

ஆளுங்கட்சியான காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணியில் எம்.எல்.ஏக்கள் மட்டுமே உள்ளனர். அதே நேரத்தில் பா.ஜ.கவுக்கு புதுச்சேரியின் எதிர்க்கட்சியான என்.ஆர். காங்கிரஸ், அ.தி.மு.க ஆகியவை ஆதரவு வழங்கியுள்ளன.

சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு ஓர் இடத்தில் கூட புதுச்சேரியில் வெல்லாத பா.ஜ.கவுக்கே குடியரசுத் தலைவர் தேர்தலில் புதுச்சேரியிலிருந்து அதிக வாக்குகள் கிடைக்கும் சூழல் நிலவுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## நடிகர் கமலஹாசனுக்கு பன்னீர்செல்வம் ஆதரவு!





சென்னை, ஜூலை 18

கமலின் குற்றச்சாட்டுக்கு பதில் கூற வேண்டுமே தவிர குறை சொல்லக் கூடாது என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியில் நடிகர் கமலஹாசன் நடத்தி வரும் பிக் போஸ் (Bigg Boss) நிகழ்ச்சிக்கு சில அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்தன. அத்துடன், அந்த நிகழ்ச்சிக்குத் தடை விதித்து, அதனை நடத்தி வரும் கமலஹாசனை கைதுசெய்ய வேண்டும் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கமலஹாசன் பேட்டி அளிக்கும்போது–

என்னைக் கைது செய்தால், சட்டம் என்னைப் பாதுகாக்கும் என்று கூறிய அதேசமயம், தமிழகத்தில் அனைத்து மட்டங்களிலும் ஊழல் மலிந்து விட்டது என்றும் குற்றம் சாட்டினார்.

கமலின் இந்தக் குற்றச்சாட்டுக்கு சட்டத் துறை அமைச்சர் சண்முகம், மீன்வளத்துறை அமைச்சர் டி.ஜெயகுமார் ஆகியோர் கண்டனம் தெரிவித்தனர்.

கமலின் கருத்துக்குத் தமிழக எதிர்க்கட்சி தலைவர் மு.க. ஸ்டாலின் மற்றும் வைகோ ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர்.


இந்த நிலையில், நேற்று ஓ.பன்னீர்செல்வம், கே.பி முனுசாமி ஆகியோர் கமலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தவை வருமாறு–

முதல்வர் எடப்பாடி தலைமையிலான அரசின் மீது நடிகர் கமல் தெரிவித்த குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்க வேண்டுமே தவிர,அவர் மீது குறை சொல்லக் கூடாது. கமலை மிரட்டுகின்ற தொனியில் அமைச்சர்கள் பேசக் கூடாது.– என்று தெரிவித்துள்ளார்.

## டில்லியில் தமிழக விவசாயிகள் மீள ஆரம்பித்தனர் போராட்டத்தை!

தமிழக விவசாயிகள் கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி வரை 41 நாள்கள் டில்லியில் போராட்டத்தை நடத்தி வந்தனர்.



பின்னர், தற்காலிகமாக அவர்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிட்டு தமிழகம் திரும்பியிருந்தனர்.

இந்தநிலையில், அவர்கள் நேற்று முன்தினம் மீண்டும் டில்லிக்குச் சென்று நூதன முறையில் தமது போராட்டத்தை ஆரம்பித்து இருக்கின்றனர்.

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்புச் சங்கத்தின் மாநிலத் தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் பிரதமர் வீட்டுக்குச் செல்ல முயன்ற இந்த விவசாயிகளை பொலிஸால் தடுத்து, நேற்று முன்தினம் முழுவதும் காவல் நிலையத்தில் வைத்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து நேற்றுக் காலை முதல் ஜந்தர் மந்தர் பகுதியில் மீண்டும் தங்களது போராட்டத்தை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

கால், கைகளை சங்கிலியால் பிணைத்து பூட்டுப் போட்டுக் கொண்டு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய அரசின் சார்பில் இணை அமைச்சர் தங்களிடம் அளித்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என்றும், அடுத்த ஓராண்டுக்கு கடன்கள் வசூலிக்கும் நடவடிக்கையில் வங்கிகள் இயங்கா என்பது உட்பட பல உறுதி மொழிகளை அவர்கள் அளித்திருந்தார்கள். ஆனால், அவை எவையும் நடக்கவில்லை என்றும், வங்கிகள் கெடுபிடியாக கடனை வசூலிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன என்றும் அய்யாக் கண்ணு சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும் விவசாயிகள் மீதான வழக்குகளைத் திரும்பப் பெறுவது உள்பட பல்வேறு உறுதிமொழிகளை அளித்தாலும் அதனை இன்னும் நிறைவேற்றவில்லை.

இந்த நிலையில்தான், நாங்கள் மீண்டும் டில்லியில் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம்.

அடுத்த 100 நாள்களுக்கு, ஒவ்வொரு நாளும் நூதன வழியில் போராட்டம் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும், விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு லாபகரமான விலை வழங்க வேண்டும், விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பது உட்பட முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தியே அவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# வெனிசுலா ஜனாதிபதிக்கு எதிரான வாக்கெடுப்பில் சூடு; பெண் சாவு; மூவர் காயம்!



கராகஸ், ஜூலை 18

வெனிசுலாவில் ஜனாதிபதிக்கு எதிரான வாக்கெடுப்பின் போது மர்ம நபர்கள் திடீர்த் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

தென்னமரிக்க நாடான வெனிசுலாவில் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவுக்கு எதிராகப் பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ பதவி விலக வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டுவருகிறது. இந்தப் போராட்டம் கடந்த ஏப்ரல் மாதம் முதல் நடைபெற்று வருகிறது.

அதில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்கள் மற்றும் பொலிஸ்-ராணுவம் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 100 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இருந்தும் போராட்டம் ஓயவில்லை. பல விதங்களில் தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்த நிலையில், ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் எதிர்க் கட்சிகளால் பொதுவான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதற்காக தலைநகர் கராகஸில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

அங்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வாக்குப்போட நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்தனர். அப்போது மோட்டார் சைக்கிளில் சிலர் கும்பலாக வந்தனர்.

பின்னர் திடீரென அவர்கள் வாக்குப் போட வரிசையில் நின்று கொண்டிருந்த பொது மக்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். இதனால் கூட்டத்தினர் சிதறி ஓடினர். உயிர் பிழைக்க அருகேயுள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் பதுங்கிக் கொண்டனர்.

இதற்கிடையே, மர்ம நபர்கள் சுட்டதில் 4 பேர் படுகாயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் மயங்கிக் கிடந்தனர்.

அவர்கள் மீட்கப்பட்டு தற்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி ஒரு பெண் பரிதாபமாக உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வருகிறது.

அவரதுபெயர் ஸியோ மரா சோலிடெட் ஸ்காட் (வயது 61). இவர் தாதியாகப் பணி புரிந்து வந்துள்ளார். ஏனைய 3 பேருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலை ஜனாதிபதி மதுரோவின் இராணுவத்தினர்நடத்தியுள்ளனர் என வெனிசுலா நாட்டின் எதிர்க் கட்சிகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

## ஆப்கானிஸ்தான் எல்லையில் ஐ.எஸ். மீது பாக். ராணுவம் குண்டுவீச்சுத் தாக்குதல்!



இஸ்லாமாபாத், ஜூலை 18

ஆப்கானிஸ்தான் எல்லையில் பதுங்கி இருந்த ஐ.எஸ். அமைப்பினர் மீது பாகிஸ்தான் இராணுவம் குண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளது.

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலையில் தற்போது ஐ.எஸ்.அமைப்பின்கை ஓங்கி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பாகிஸ்தானில் பல்வேறு தாக்குதல்களை நடத்தி உள்ளனர்.

அவர்கள் ஆப்கானிஸ்தானில் வலுவாக உள்ளனர். எல்லை தாண்டி வந்து பாகிஸ்தானில் தாக்குதல் நடத்தி விட்டு மீண்டும் ஆப்கானிஸ்தானுக்குள் சென்று விடுகின்றனர்.

எனவே, ஆப்கானிஸ்தான் எல்லையில் ஐ.எஸ்.அமைப்பினர் மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. கைபர் ஏஜென்சி பகுதியில் ராஜ்கல் பள்ளத்தாக்கு மலைப் பகுதியில் பதுங்கியிருந்த ஐ.எஸ். அமைப்பினர் மீதே இந்தக் குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

இதற்கு 'கைபர் 4' ஒபரேசன் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் எத்தனை ஐ.எஸ். அமைப்பினர் கொல்லப்பட்டனர் என்பன போன்ற விவரங்கள் வெளியிடப்படவில்லை.

## வட கிழக்கு சீனாவில் பெருவெள்ளம்: மக்கள் வெளியேற்றம்; 18 பேர் பலி!



பீஜிங், ஜூலை 18

வடகிழக்கு சீனாவின் ஜிலின் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 18 பேரைத் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

சீனாவில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருவதால் ஜிலின் மாகாணத் தின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அந்தப் பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் வீதிகள் பெருமளவில் சேதமடைந்துள்ளன.

கரை புரண்டோடிய வெள்ளத்தில் சிக்கி 18 பேர் பரிதாபமாக உயிர் இழந்துள்ளனர் என்றும் 18 பேரைக் காணவில்லை என்றும் அதிகாரிகள் நேற்று தெரிவித்துள்ளனர்.

மேலும், ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வறட்சி நிவாரணக் குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜிலின் மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைச்சீரமைக்கும் பணிகளில் சுமார் 30 ஆயிரத்துக்கும் அதிகமான மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ளத்தில் சிக்கி மாயமான 18 பேரைத் தேடும் பணிகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் எல்லையில் துப்பாக்கிச் சூடு: ஈரான் நாட்டைச் சேர்ந்த இருவர் உயிரிழப்பு!

### தொடர்கிறது தீவிரவாதிகளின் அத்துமீறல்



பலுசிஸ்தான், ஜூலை 18

ஈரான் எல்லைப்பகுதியில் அத்துமீறி நுழைந்து பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஈரான் நாட்டைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈரான்-பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் தொடர்ந்து பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதிகள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரான் எல்லை பாதுகாப்பு படையை சேர்ந்த பத்து பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுத்து ஊடுருவலைத் தடுக்குமாறு பாகிஸ்தான் பிரதமருக்கு ஈரான் ஜனாதிபதி கடிதம் எழுதியிருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் எல்லைப்பகுதியில் ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த தீவிரவாதிகள் அப்பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் அந்தப் பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த இரண்டு அப்பாவி ஈரானியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைப் பற்றி தகவல் கிடைத்ததும் அப்பகுதிக்கு விரைந்த ஈரான் இராணுவத்தினர் நடத்திய பதில் தாக்குதலில் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டார், இருவர் காயமடைந்துள்ளனர்; ஏனையவர்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் தப்பியோடி விட்டனர் என ஈரான்இராணுவம்கூறியுள்ளது.

## காஷ்மீர் பகுதியின் ஏரியில் மூழ்கி 4 பாக். இராணுவத்தினர் மரணம்!

இஸ்லாமாபாத், ஜூலை18

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் அமைந்துள்ள ஏரியை சுற்றி வாகனத்தில் சென்று கொண்டிருந்த பாகிஸ்தான் இராணுவத்தினர், நீரில் மூழ்கி இறந்துவிட்டனர் என அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

ஏரியில் மூழ்கி உயிரிழந்தவர்களில் ஒரு வீரரின் சடலம் மட்டும் மீட்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய வீரர்களின் சடலங்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

காலைக்கதிர் Kalaikkathir


# கோல் காப்பாளர் அபாரம்: சென்.ஜோசப் சம்பியன்!







(கங்கா)

கோல் காப்பாளரின் அபாரமான தடுப்புக்களால் எதிரணியின் தாக்குதல் ஆட்டங்கள் தடுக்கப்பட, தமக்கு கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை கோலாக்கி, 20 வயது, கப் பிரிவில் சென். ஜோசப் அணி சம்பியனாகியது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 110 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, கல்லூரியின் சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய ரீதியிலான புட்சால் தைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டி ஒவ்வொன்றும் 15 நிமிடங்களைக் கொண்டது. அதாவது, முதற்பாதியாட்டம் 7 நிமிடங்களைக் கொண்டதாகவும், இடைவேளை 1 நிமிடம் கொண்டதாகவும், தொடர்ந்து இரண்டாவது பாதியாட்டம் 7 நிமிடங்கள் கொண்டதாகவும் நடைபெற்றன.

14, 16, 18 மற்றும் 20 வயதுப்பிரிவு அணிகள் எனப் போட்டிகள் நடைபெற்றன. முதற்சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் அணிகள் பெறும் வெற்றியின் அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டன. கப், சீல், பிளோட், போல் மற்றும் சோஸ் என இரண்டாம் சுற்றில் பிரிக்கப்பட்டன.

அதனடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலும் கப் பிரிவு முதன்மையான பிரிவாக இருந்தது. 20 வயது கப் பிரிவின் இறுதியாட்டத்தில் கொழும்பு சென். ஜோசப் கல்லூரி அணியும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

போட்டி தொடங்கிய முதல் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி தாக்குதல் ஆட்டத்தை மேற்கொண்டு, கோல் அடிப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொண்டது. இருந்தும், சென்.ஜோசப் அணியின் கோல் காப்பாளரின் அபார தடுப்பினால் அனைத்தும் தடுக்கப்பட்டன.

இந்த நிலையில் தமக்கு கிடைத்த சந்தர்ப்பம் ஒன்றை சென்.ஜோசப் அணி கோலாக மாற்றியது. அந்தக் கோலை பி.எல். நிமேஸ் சலிந்த அடித்தார். முதற்பாதியாட்டம் அந்தக் கோலுடன் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் சென்.ஜோசப் அணி தடுப்பாட்டம் ஆடியது. அதற்கு கோல் காப்பாளரும் உதவி செய்ய, இரண்டாம் பாதியில் சென். பற்றிக்ஸ் அணியினால் பதில் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை.

முடிவில் சென்.ஜோசப் அணி 1:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

# சென்.பற்றிக்ஸ், கொற்றாவத்தை அணிகள் சம்பியன்!





(கங்கா)

இளவாலை ஹென்றியரசர் கல்லூரி நடத்திய தேசிய ரீதியிலான புட்சால் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், 16 வயது மற்றும் 14 வயது கப் அணிகளின் பிரிவில் முறையே சென்.பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய அணிகள் சம்பியனாகியுள்ளன.

16 வயது கப் பிரிவின் இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 3:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியுள்ளது.

14 வயது கப் பிரிவின் இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதின.

இதில் கொற்றாவத்தை அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அணி, 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றுள்ளது.

# 18 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்து சம்பியன்!

(கங்கா)

இளவாலை ஹென்றியரசர் கல்லூரி நடத்திய தேசிய ரீதியிலான புட்சால் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், கப் பிரிவில் 18 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியது.



14, 16, 18 மற்றும் 20 வயதுப் பிரிவு அணிகள் எனப் போட்டிகள் நடைபெற்றன. முதற்சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் அணிகள் பெறும் வெற்றியின் அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டன. கப், சீல், பிளோட், போல் மற்றும் சோஸ் என இரண்டாம் சுற்றில் பிரிக்கப்பட்டன.

அதனடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலும் கப் பிரிவு முதன்மையான பிரிவாக இருந்தது. 16 வயது, கப் பிரிவின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி அணியும் மோதின.

முதற்பாதியாட்டத்தில் மானிப்பாய் இந்து அணியின் வீரன் ஜெயராசா தில்லைக்காந்தன் டைவ் அடித்து, அடித்த பந்து கோலாக மாறியது.

இரண்டாவது பாதியாட்டத்தில் எவ்வித கோல்களும் பெறப்படவில்லை.

முடிவில் மானிப்பாய் இந்து அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

# உலக பரா மெய்வன்மை போட்டிகளில் இலங்கைக்கு வெள்ளிப் பதக்கம்!

கொழும்பு, ஜூலை 18
லண்டனில் நடைபெற்று வரும் 8 ஆவது உலக பரா மெய்வன்மைப் போட்டித் தொடரில் இலங்கைக்கான முதலாவது பதக்கத்தை தினேஷ் பிரியந்த ஹேரத் பெற்றுக்கொடுத்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக் கான எப்-46 பிரிவில் ஈட்டி எறிதல் போட்டிக்காக இலங் கையைப் பிரதிநிதித்துவப் படுத்தி கலந்துகொண்ட தினேஷ் பிரியந்த ஹேரத், 57.93 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். இது அவர் பெற்றுக்கொண்ட 2ஆவது சர்வதேசப் பதக்கமாகும்.

கடந்த வருடம் நடை பெற்ற றியோ பராலிம் பிக்கில் இதே போட்டிப் பிரிவில் கலந்துகொண்ட தினேஷ், 58.23 மீற்றர் தூரத்திற்கு ஈட்டியை எறிந்து வெண்கலப் பதக்கத்தை பெற்றுக் கொண்டமையுடன், அது பராலிம்பிக் போட்டி



வரலாற்றில் இலங்கை பெற்றுக்கொண்ட இரண் டாவது பதக்கமாகவும் பதிவானது.

முன்னதாக கடந்த 2012 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற பராலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பில் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டி யில் பிரதீப் சஞ்ஜய மூன் றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கம் ஒன் றைப் பெற்றார்.

இலங்கை இராணுவத்தின் கஜபா படையணியின் ஓய்வு பெற்ற முன்னாள் வீரரான ஹேரத், கடந்த வருடம் ஜேர்மனியில் நடைபெற்ற பரா க்ரேனட் பிரிக்ஸ் போட்டிகளில் 53.69 மீற்றர் தூரம் எறிந்து றியோ பராலிம்பிக்கில் பங்குபற்றும் வாய்ப்பையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இந்தியா வைப் பிரதிநிதித்துவப்படுத் திய சுந்தர் சிங் குர்ஜார் 60.36 மீற்றர் தூரம் எறிந்து இந்தப் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், சீனாவின் குவோ சுன் லியாங் 56.14 மீற்றர் தூரத்தை எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இதேவேளை, பெண் களுக்கான 400 மீற்றர் ஓட்ட இறுதிச் சுற்றில் பங்கேற்கும் வாய்ப்பை இலங்கையின் அமரா இந்துமதி பெற்றுக்கொண் டார்.

எனினும் முன்னதாக நடைபெற்ற ரி 45-46-47 பிரிவைச் சேர்ந்த மாற்றுத்திறன் கொண்ட பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியின் முதல் சுற்றில் கலந்து கொண்ட அவர், கடைசி இடத்தைப் பெற்றதன் மூலம் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்தார்.

அதேபோன்று, ரி 42 பிரிவின் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் பந்தயத் தில் கலந்துகொண்ட அனில் பிரசன்ன போட்டித் தூரத்தை 25.88 வினாடி களில் நிறைவு செய்து 6 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

## விம்பிள்டனில் முதல் தடவையாக சம்பியனானார் கார்பின் முகுருஸா!

லண்டன், ஜூலை 18
அகில இங்கிலாந்து புல்தரை டெனிஸ் மற்றும் ரொக்கெட் கழக அரங்கில் கடந்த ஞாயிற் றுக் கிழமை நடைபெற்ற சீமாட்டிகள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் முன்னாள் சம்பியன் வீனஸ் வில்லியம்ஸை இரண்டு நேர் செட்களில் வெற்றி கொண்ட ஸ்பெய்ன் வீராங் கனை கார்பின் முகுருஸா முதல் தடவையாக விம் பிள்டனில் சம்பியன் பட்டத்தைச் சூடினார்.

மத்திய அரங்கில் நடைபெற்ற இப்போட்டி யின் முதலாவது செட்டில் வீனஸ் வில்லியம்ஸ் விடுத்த கடும் சவாலை முறியடித்த 23 வயதான முகுருஸா, 7 - 5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றார்.

ஆனால், இரண்டாவது செட்டில் அபார ஆற்றல் களையும் நுட்பங்களையும் ஒருங்கே பிரயோகித்து முழுத் திறமையுடன் விளையாடிய முகுருஸா, 6 - 0 என தன்னைவிட 14 வயது மூத்தவரான செரினா வில்லியம்ஸை வெற்றி கொண்டார்.



இதன் மூலம் பகிரங்க டென்னிஸ் சகாப்தத்தில் அதிக வயதில் சம்பியனா வதற்கான வில்லியம்ஸின் வாய்ப்பை முகுருஸா அற்றுப் போகச் செய்தார்.

மாபெரும் (க்ராண்ட் ஸ்லாம்) டென்னிஸ் போட் டிகளில் முகுருஸா வென் றெடுத்த இரண்டாவது சம்பியன் பட்டம் இது வாகும்.

கடந்த வருடம் பிரெஞ்சு பகிரங்க போட்டியிலேயே முதலாவது மாபெரும் சம்பி யன் பட்டத்தை முகுருஸா வென்றிருந்தார்.

இந்த வெற்றி தொடர்பில் முகுருஸா தெரிவிக்கையில்-

வீனஸ் வில்லியம்ஸுக்கு எதிராக மிகவும் கடுமை யான போட்டியை எதிர் கொண்டேன்.

அவர் ஒரு திறமையான வீராங்கனை. அவரது ஆற் றல்களைப் பார்த்தவாறு நான் வளர்ந்துவந்தேன். - என அவர் தெரிவித்துள்ளார்.

தனது பயிற்றுநர் கொன் சிட்டா மார்ட்டினெஸுக்குப் பின்னர் விம்பிள்டனில் சீமாட்டிகள் ஒற்றையர் போட்டியில் சம்பியனான இரண்டாவது ஸ்பானியர் முகுருஸா ஆவார்.

அத்துடன் இறுதி ஆட்டங்களில் வில்லியம்ஸ் சகோதரிகள் இருவரையும் வெற்றிகொண்ட முதலா வது வீராங்கனையும் முரு குஸா ஆவார்.

## காதலியின் முத்தத்தால் தடைக்குள்ளான வீரர்!



நியூயோர்க், ஜூலை 18
காதலி கொடுத்த முத்தம் காரணமாக அமெரிக்காவின் ஒலிம்பிக் சம்பியன் கில் ரொபார்ட்ஸ் தடைக்குள்ளான சம்பவம் அரங்கேறியுள்ளது. அமெரிக்காவின் ஓட்டப் பந்தய வீரரான கில் ரொபார்ட்ஸ் ரியோ ஒலிம் பிக்கில் 4X400 தொடர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றிருந்தார்.

அவர் கடந்த மார்ச் மாதம் ஊக்கமருந்து பயன்படுத்தி யுள்ளாரா என்பதை பரிசோ தனை செய்வதற்காக அவ ரிடமிருந்து மாதிரி எடுக்கப் பட்டது.

அவரிடம் எடுக்கப்பட்ட மாதிரி பரிசோதனை செய் யப்பட்டதில், தடை செய் யப்பட்ட மருந்தான புரொ பெனெசிட்-ஐ பயன்படுத் தியமை தெரியவந்தது. இதனால் கடந்த மே மாதம் 5ஆம் திகதியிலிருந்து கில் ரொபார்ட்ஸ் போட்டிகளில் பங்கேற்க தடைவிதிக்கப் பட்டது.

இந்நிலையில் அமெரிக் காவின் ஊக்கமருந்து தடுப்பு நிறுவனம், அவரது உடலில் புரோபெனெசிட் எப்படி வந்தது என்பதை விவரித்துள்ளது.

பில் ரொபார்ட்ஸின் காதலி அலெக்ஸ் சலாசர். ரொபார்ட் ஸிற்கு பரிசோதனை மாதிரி எடுப்பதற்கு முன்பு சலாசர் சைனஸ் பிரச்சினை காரண மாக புரொபெனெசிட்டை பயன்படுத்தியுள்ளார்.

பரிசோதனை மாதிரி எடுக்கும் அன்று ரொபார்ட்ஸ் தனது காத லிக்கு முத்தம் கொடுத் துள்ளார். அவர்கள் சந்திக்கும் போதெல்லாம் ரொபார்ட்ஸ், தனது காத லிக்கு தொடர்ந்து முத்தம் கொடுத்துள்ளார். இதனால் அவரது உடலில் அந்த மருந்து சேர்ந்துள்ளது என்று அமெரிக்க தீர்ப்பாய அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

எனது காதலி மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வந்தமை எனக்குத் தெரி யாது. முத்தம் கொடுத்தால் தடை வரை செல்லும் என் பது குறித்து நான் அறிந் திருக்கவில்லை என்று ரொபார்ட்ஸ் கூறியுள்ளார்.

## ஊர்காவற்றுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான்ஆர்சபேசன்முன்னிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பிறிதொரு கொலை வழக்கின் சந்தேகநபராக மன்றில் ஆஜர்படுத்தப்படும் ஒருவரிடம் கர்ப்பிணித் தாயின் படுகொலை தொடர்பில் வாக்கு மூலம் பதிவு செய்யப்படவுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடனர்.

புங்குடுதீவைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரிடமே இவ்வாறு வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளதாகப்பொலிஸார்அறிவித்தனர்.

இதேவேளை, சம்பவம்தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடயப் பொருள்களில் வழக்கிற்கு சம்பந்தப்படாத பொருள்களை அவர்களுடைய உறவினர்களிடம் ஒப்படைக்கவும் பொலிஸார் அனுமதி கோரினா். அதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய சந்தேகநபர் ஒருவரின்35,370ரூபாபணமும் அவருடைய தேசிய அடையாள அட்டைமற்றும்பணப்பை ஆகிய வற்றையும்நீதிவான்முன்னிலையில் சந்தேகநபரிடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, அடுத்த சந்தேக நபரின் 110 ரூபா பணத்தையும் அவரின் தேசிய அடையாளஅட்டையையும்பொலிஸார் ஒப்படைத்தனர்.

இதேவேளை, இந்த வழக்கை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் கடந்த ஜனவரி 24 ஆம் திகதி கர்ப்பிணித் தாயொருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சிங்கப்பூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்காவைச் சந்தித்து இருதரப்பு உறவு குறித்துப் பேசுவார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர்கள் பாட்டலி சம்பிக்க ரணவக்க, மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம, சாகல ரட்னாயக்க ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசுவார்.

எதிர்க்கட்சித்தலைவருக்கும் அவருக்கும் இடையிலான சந்திப்பு இன்று பிற்பகல் 3 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவரின்கொழும்பு–7அலுவலகத்தில் நடைபெறும்.

நாளை யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் அவர், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனைச் சந்திப்பதோடு, யாழ். போதனா வைத்தியசாலைக்கும் விஜயம் செய்வார். (உ)

## சாட்சியமளிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன் றம் அறிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், போலி ஆவணங்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அப்போது எதிரணி பொது வேட்பாளராகஇருந்தமைத்திரிபால சிறிசேனவும் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் ஒப்பமிட்ட ஒப்பந்தம் என்ற பெயரில் ஒரு போலியான ஆவணத்தை திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்டார் என இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் முதலாம் மற்றும் இரண்டாவது சாட்சியாளர்களாக ஜனாதிபதியும், பிரதமரும் பெயரிடப்பட்டுள்ள நிலையில், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், கடமைகளின்நிமித்தம் அவர்களால் நீதிமன்றில் ஆஜராக முடியாதுள்ளதாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுட்டிக்காட்டியதுடன், இதற்காக பிறிதொரு தினத்தை வழங்குமாறும் அவர் கோரியிருந்தார்.

சாட்சியாளர்கள் தரப்பு கோரிக்கையை ஆராய்ந்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நிஸங்க நாணயக்கார, இருவருக்கும் மீளவும் அறிவித்தலை அனுப்புமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன், குறித்த வழக்கு எதிர்வரும் டிசம்பர் 4ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பன்னிப்பிட்டியபிரதேசத்தில் புதிய அடுக்குமாடி வீட்டு திட்டத்திற்கு அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

நாட்டின் முக்கியமான பிரச்சினைகளைத் தீர்க்கவே தேசிய அரசாங்கம் நிறுவப்பட்டது. இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து செல்வது மிகவும் கடினமான பயணமாகும். எச்சரிக்கையாகத் தான் இருக்க வேண்டும். ஓரளவு பிழைத்தாலும் எங்கு போய் மோதும் என்று தெரியாது. எனினும் இவையனைத்தையும் அறிந்த பின்னரே தேசிய அரசாங்கத்தை நிறுவினோம்.

ஆகவே நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு தேசிய அரசாங்கத்தை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கு இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இரண்டு கட்சிகளும் இணைந்து அரசு அமைத்துச் செயற்படுவதால்தான்சர்வதேச உதவிகள் பல வழிகளிலும் தாராளமாகக் கிடைக்கின்றன.

இந்த அரசின் செயற் போக்கை மக்கள் அவதானிப்பர். எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தலில்பொருத்தமான அரசியல்வாதிகளை அப்போது அவர்கள் தெரிவு செய்வார்கள். – என்றார்பிரதமர்ரணில்விக்கிரமசிங்க. (உ)

## இழுபறிப்படும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் சந்திப் பின்போதே அவர் மேற்கண்ட வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அண்மையில்பிரதமர்தலைமையில் அலரி மாளிகையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக இடம்பெற்ற கட்சித் தலைவர்களுடனானசந்திப்பில் தானோ கூட்டுஎதிரணியினரோ கலந்துகொள்ளவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பிற்போடும் நோக்கில் இந்தச் சந்திப்பு நடைபெற்றதேஅதற்குக்காரணம்எனவும் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

தேர்தல் நடைபெறாமையால் உள்ளூராட்சி நிறுவனங்கள்வீழ்ச்சியடைந்துள்ளன எனவும், வரும் காலத்தில் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்துக்குப் பாரிய அழுத்தங்களைக் கொடுக்கத் தாங்கள் தீர்மானித்துள்ளனர் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என அறிவிக்கப்பட்டுள்ளது.

நடவடிக்கைக் குழுவின் இடைக்கால அறிக்கையை எப்படியாயினும் இந்த மாத முடிவுக்கு முன்னர் இறுதி செய்து பூர்த்தியாக்கிவிட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ள பிரதமர், அதன் காரணமாக நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும் சமயம் என்று பார்க்காமல் வழிகாட்டல் குழுவின் கூட்டங்களைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

அதனாலேயே நாடாளுமன்ற அமர்வு இல்லாத காலத்திலும் இவ்வாரம் கூட்டம் கூட்டப்படுவதாகத்தெரிவிக்கப்பட்டது. (உ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயமறிந்த வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

ரெலோவின் உயர்மட்டக் கூட்டம் நேற்று முன்தினம் வவுனியாவில்நடைபெற்றபோது விந்தனின் பெயரே முக்கியமாகப் பரிசீலிக்கப்பட்டதாகவும் –

அடுத்து வரும் நாள்களில் அது குறித்துமுதலமைச்சர்விக்னேஸ்வரனுக்கு, ரெலோ உத்தியோகபூர்வமாக கடிதத்தில் அறிவிக்கும்என்றும்அறியவந்தது.

எனினும் இந்தத் தகவலை ரெலோவின் மற்றொரு வடமாகாண சபை உறுப்பினரான எம்.கேசிவாஜிலிங்கம்மறுத்துள்ளார்.

“ரெலோவின் உயர்மட்டக் குழு இவ்விடயம் குறித்துக் கூடி ஆராய்ந்துள்ளது. எனினும் முடிவு ஏதும் எட்டப்படவில்லை; பரிந்துரை ஏதும் செய்யப்படவில்லை. மீண்டும் 19 ஆம் திகதி (நாளை) கட்சியின் உயர் மட்டம் மீண்டும் கூடி இது குறித்து முடிவு செய்யும்.” – என்றார் சிவாஜிலிங்கம்.

நேற்று முன்தினம் நடைபெற்றரெலோவின் உயர்மட்டக் கூட்டத்தில் சிவாஜிலிங்கத்தின் ஆதரவாளர்கள் சிலர், அவருக்கு அமைச்சர் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என வற்புறுத்தினர். அது மறுக்கப்படுகின்றமையை அவர்கள் கொதிப்புடன் எதிர்த்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினராகஇருந்தஅவருக்கேஅமைச்சர்பதவிக்குத்தகுதி இருப்பதாக அவர்கள் வாதிட்டனர்.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார்வடக்கு மாகாணமுதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் முரண்பாடுகளை தீர்வுசெய்தல் தொடர்பான கருத்தரங்கு நேற்று யாழ். சுபாஸ் ஹோட்டலில் நடைபெற்றது. அங்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

தூங்குஅவர்மேலும்கருத்துத் தெரிவிக்கையில் –

கடுமையான போருக்குப் பின்னர்மீண்டெழுந்து வருகின்ற வடமாகாணத்தின் அபிவிருத்திப் பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

எமதுஅபிவிருத்திக்குவேண்டிய நிதி மூலங்களைத் தேடித்தேடிக் கண்டுபிடித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளல், அவ்வாறு கிடைக்கப்பெற்ற நிதிகளை முறையாகச் செலவு செய்வதற்கான திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை நாம் யாவரும் முனைப்புடன் செயற்படுத்த வேண்டும்.

வேலைகள் துரிதமாக நிறைவுறுத்தப்படாமைக்கான காரணங்களைஆராய்வதுஅவசியம். அதேநேரம் அவ் வேலைகளை விரைந்து நிறைவு செய்வதற்கானவழிமுறைகளையும்தேடிக் கண்டுபிடிக்கவேண்டும்.

தொழில்நுட்பவியலாளர்கள் பற்றாக்குறை, அலுவலர்களின் அனுபவமின்மை போன்ற பல் வேறு காரணங்களை அடுக்கிக் கொண்டு செல்லாமல், தேவையேற்படின் சிரேஷ்ட பொறியியலாளர்கள் கூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் கடமைகளை நிறைவு செய்ய முன்வரலாம் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

வேலைகளை விரைந்து முடிக்கவேண்டும் என்ற எண்ணம்எம்முள் வேரூன்றிவிட்டதாயின் எந்தச் சவாலுக்கும் நாம் முகங்கொடுக்க முடியும். எந்தச் சட்டத்தின் கீழ் வேலைகளை இழுத்தடிக்கலாம் என்று சிலர் ஆராய்வதற்குத் தலைப்படுகின்றார்கள். அதுதவறு. நாம் நூறு வீதம் இதயசுத்தியுடன் விரைந்து செயற்பட முன்வந்தால் சட்டங்களும் அதற்கு இடமளிக்கும். – என்றார். (ம)

## தலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகலப்பாக மாறியுள்ளது. இதன் போது இளைஞன் தனது கையிலிருந்த தலைக்கவசத்தினால் வயோதிபர் மீது தாக்கியதால் தலையில் பலத்த காயம் அடைந்த வயோதிபர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த சிமைல் தாம்டீன் (வயது 64) என்ற வயோதிபரே உயிரிழந்துள்ளார். தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 18 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என நேரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (உ–100)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் தேர்தலை நடத்தவில்லை என அரசியல் ரீதியிலும், ஊடகங்களிலும் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், உண்மையில்அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் இருக்கவில்லை. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல் தொடர்பில் முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த சட்டத்திலுள்ள முறைகேடுகள் மற்றும் ஒழுங்கற்ற தன்மை காரணமாகவே தேர்தலை நடத்த முடியாத நிலை உருவானதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தமது நிறுவன அதிகாரத்துடன் உரியவாறு சேவையாற்றுவதற்கு நகரசபைத் தலைவர்களும் மாகாண செயலாளர்களும் பாடுபட வேண்டுமெனத் தெரிவித்த ஜனாதிபதி, சில உள்ளூராட்சி நிறுவனங்கள் அதன் முன்னாள் தலைவர் களால் இன்னமும் இயக்கப்படுகின்றன எனவும், அந்த நிறுவனங்களுக்குரிய வாகனங்கள் உள்ளிட்ட வளங்கள் அவர் களது தனிப்பட்ட மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என தனக்கு தக வல் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார். (உ)

## மயிலிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிகளை விடுவிக்குமாறு எழுத்து மூலம் மயிலிட்டி மக்கள் அறிவிக்கும்பட்சத்தில்அதுதொடர்பாக உயர் மட்டத் தலைவர்களுடன் தாம் கலந்துரையாடுவார் என சிறுவர் விவகார இராஜங்க அமைச்சர்விஜயகலா மகேஸ்வரனிடம் யாழ். படைகளின் கட்டளைத்தளபதி உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு மயிலிட்டி துறைமுகம் உள்ளிட்ட54 ஏக்கர்காணிகடந்த மாதம் இறுதிப் பகுதியில் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது.

எனினும் தொடர்ந்து உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிக்குள் இரண்டு பாடசாலைகள் காணப்படுகின்ற நிலையில் அதனை விடுவிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கும்யாழ்படைகளின்கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராய்ச்சிக்குமிடையில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது எஞ்சிய காணிகளை விடுவித்தல் மற்றும் காசநோய் வைத்தியசாலை புனரமைத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

## ஆஸி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருணாநாயக்க மற்றும் ஏனைய முக்கியஅமைச்சர்கள்சிலரையும் அவர் சந்திக்க உள்ளார்.

இருதரப்பு பாதுகாப்பு மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் அவர் பேச்சுக்களில் ஈடுபட உள்ளார்.

டெங்கு காய்ச்சலைத் தடுக்க ஆஸ்திரேலியா வழங்கும் உதவி குறித்தும் ஜனாதிபதியுடன் இணைந்து ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அறிவிக்க உள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நல்லிணக்கசெயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் குறித்தும் அவர் பேச்சு நடத்த உள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிரந்தர அரசியல் தீர்வை அடையும்வரை ஒற்றுமையுடன் செயற்படுவது அவசியம்

## வவுனியா வீர மக்கள் தின நிகழ்வில் வடக்கு சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம்

நாட்டில் தமிழ் மக்களுக்கான நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படும்வரை பொதுச் சிந்தனையுடன் மக்களுக்காக ஒற்றுமையுடன் செயற்படுவோம்.

எம்மிடையே உள்ள கட்சி, பேதங்களை மறந்து நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கும் வரையாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். அதுவரை கூட்டமைப்பு உடைந்து போவதை அனுமதிக்க முடியாது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, கோவில்குளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வீரமக்கள் தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முதற் தடவையாக இன்று வீர மக்கள் தினத்தில் பங்கெடுத்துள்ளேன். அதற்குக் காரணம் உள்ளது. அண்மையில் வடக்கு மாகாண சபையில் ஏற்பட்ட குழப்பங்களில்



விரும்பியோ விரும்பாமலோ நானும் சம்பந்தப்பட்டிருக்கின்றேன். அந்தக் குழப்பத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் சித் தார்த்தனுடன் நான் பல தடவை பேசியிருக்கின்றேன். அதன்போது எனது அமைச்சுப் பதவி தொடர்பில் நான் எதுவும் பேசவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை பற்றி பேசினேன். ஏதோ ஒரு காரணத்துக்காக நாங்கள் தற் போத பிரிந்து செயற்படுகின் றோம். இது பிரிந்து செயற்படுவதற்கான காலமல்ல. போர் முடிவடைந்து 8 வருடங்கள் கடந்து விட்டன. இப்போதும் நாங்கள் ஒருவரையொருவர் குற்றம் சொல்லுபவர்களாகவே இருக்கின்றோம். அவ்வாறு நாங்கள் செய்வதால் மல்லாக்கா படுத்துக் கொண்டு துப்புபவர்களாகவே செயற்படுகின்றோம்.

தற்போதைய சூழ்நிலை நாங்கள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டிய காலமாகும். நாட்டில் தமிழ் பேசும் மக்கள் ஏனைய இனங்களைப் போன்று சம அந்தஸ்துடன் வாழுவதற்கான அரசியல் தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டிய காலமாகும். இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் தவறவிடுவோமாக இருந்தால் எமது இனத்துக்கு நாங்கள் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும். சம்பந்தன் ஐயா சொன்னார் 2016 இல் தீர்வு வரும் என்று. தற்போது 2017 இல் தீர்வு வரும் என்கிறார்கள் இப்படி முகப்புத்தகங்களில் பலர் பதிவிடுகிறார்கள். தங்களின் ஆதங்கங்களை வெளிப்படுத்துகின்றார்கள். நிரந்தரமான அரசியல் தீர்வு என்பது அவ்வளவு சுலபமானதல்ல.

வடக்கு மாகாண சபையில் ஆளும் த.தே.கூட்டமைப்புக்குள் தோன்றிய பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்படவில்லை. தொடர்ந்த வண்ணமே அவை உள்ளன. அப்படியிருக்கையில் இரண்டு தேசிய இனங்களுக்கிடையில் 60 வருடங்களாக நிலவிய பிரச்சினை, இரு பகுதிகளிலும் பலர் உயிர்களை மாய்த்திருக்கின்றார்கள், மன ரீதியாக வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கின்றார்கள். இரண்டு பகுதியினரும் பலவிட் டுக் கொடுப்புக்களைச்செய்ய வேண்டும். -என்றார். (எ-100)

## நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை - காலை 8 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** தெற்கிலுப்பைக்குளம் பிரதேசத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** அத்திமோட்டை, கூராய், விடத்தல்தீவு கிராமம், தேவன் பிட்டி, வெள்ளாங்குளம், கள்ளியடி, இலுப்பைக்கடவை, மூன்றாம் பிட்டி, கணேசபுரம், வெள்ளாங்குளம் தீர்ப்பாசனத்திணைக்களம், விடத்தற்தீவு வைத்திய சாலை, கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

யாழ்.மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினரால் 2017 ஆம் ஆண்டுக்கான நிறுவைகள் அளவைகள், நிறுக்கும் கருவிகள் முத்திரையிடல் நிகழ்வு வலி . கிழக்குப் பிரதேச சபையின் எல்லைக் குட்பட்ட பகுதிகளில் எதிர் வரும் தினங்களில் இடம் பெறவுள்ளது. எனவே வலி. கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த சகல வர்த்தகர்களும் (ப.நோ.கூ. சங்கங்கள், சந்தை வியாபாரிகள் உட்பட) நிறுவைகள் அளவைகள், நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு சபையின்செயலாளர்யு.ஜெயலீபன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 20,21 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை வலி.கிழக்குப் பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்திலும்-

24,25 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை வலி. கிழக்குப் பிரதேச சபை யின் அச்சுவேலி உபஅலுவலகத்திலும்-

27,28 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை வலி. கிழக்குப் பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்திலும் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## க.பொ.த.(உ/த) பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல்

க.பொ.த(உ/த) 2017பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு இந்துக் கல்லூரியின் சிவ ஞான வைரவப் பெருமான் ஆலயத்தில் மாதா,பிதா, குரு தெய்வ வழிபாட்டுடன் வழங்கப்பட உள்ளது. பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் அனைவரும் தங்களின் பெற்றோருடன்சமுகமளித்துத் தமது அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். இரண்டாம் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் மேற் குறிப்பிட்ட நேரத்தில அலுவலகத்தில் தங்களுக்குரிய அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். (இ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அமெரிக்கா நிதி வழங்கியமை குறித்து விசாரிக்க வேண்டும்

## சிரேஷ்ட ஆய்வாளர் சமரநாயக்க கோரிக்கை



இலங்கையில் நடைபெற்ற கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அமெரிக்காவால் நிதி வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் பணியாளரும், சிரேஷ்ட அரசியல் ஆய்வாளருமான மொஹான் சமரநாயக்க கோரியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் போது அமெரிக்காவிடம் இருந்து பணம் பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமெரிக்க முன்னாள் ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி ஆற்றிய உரையொன்றில், இலங்கை விவகாரம் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மியன்மார், இலங்கை மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் ஜனநாயகத்தை மீள நிலைநாட்டுவதற்கு 60 கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டன என்ற ஜோன் கெரி கூறியிருந்தார்.

அப்போதைய அரசு மேற்குலக நாடுகளின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளத் தவறியதனால் ஆட்சி மாற்றம் செய்ய மேற் குலக நாடுகள் விரும் பின.-என்றார்.

# அரச முகாமைத்துவ சேவையில் இவ்வருடம் 3 ஆயிரம் பேரை இணைக்க நடவடிக்கை

அரச முகாமைத்துவ சேவையில் இந்த வருடத்தில் புதிதாக மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர்.

எதிர்வரும் 22 ஆம், 23 ஆம் திகதிகளில் இதற்கான போட்டிப் பரீட்சை நடத்தப்பட இருப்பதாக அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இதற்காக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். அனைத்து பரீட்சார்த்திகளுக்குமான பரீட்சை அனுமதிஅட்டை தற்போது அனுப்பி வைக்கப் பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்தார்.

இதேவேளை,இரண்டு மாத காலப் பகுதிக்குள் இதற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப் பட்டு முகாமைத்துவ சேவையில் நிலவும் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும் என்று அரச கூட்டு சேவை பணிப் பாளர் நாயகம் கே.வி.பி. எம்.ஜி கமகே தெரிவித்தார். (எ)

# மடு ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல் நாளை

மடு, ஜூலை 18

மடு கல்வி வலய அதிபர், ஆசிரியர்களுடனான கலந் துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆண்டாங்குளம் றோ.க.பாடசாலைக்கு அருகிலுள்ள ஆண்டாங்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் வடக்கு மாகாணத்தில் இலங்கை ஆசிரியர் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வுள்ள இக் கலந்துரையாடலில் அதிபர்கள், ஆசிரியர்களின் பதவியுயர்வுகள், புதிய சம்பள மாற்றங்கள், இடமாற்றங்கள் மற்றும் அதிபர், ஆசிரியர் எதிர்கொள்ளும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளன.

மடு கல்வி வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டு பயன்பெற முடியும் என மடு வலய இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (இ)


## பரிசளிப்பு விழா

அராலி இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சொர்ணம் செல்லையா ஞாபகார்த்த மண்டபத்தில் கல்லூரி அதிபர் பா. பாலகுமார் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்சு.தேவமனோகரனும் சிறப்பு விருந்தினராக ஆஸ்திரேலியா பொறியியலாளர் சிவானந்தன் தம்பதிகள், லண்டனிலுள்ளவிரிவுரையாளர் தி. விஜயகாந்த ரூபனும் மதிப்புறு விருந்தினராக கல்லூரியின் ஓய்வுபெற்ற சங்கீதஆசிரியை திருமதி சிவகாமசுந்தரி விஜயரட்ணமும் கலந்து கொள்வர்.

காலைக்கதிர் Kalaikkathir






## இலங்கை – ஸிம்பாப்வே டெஸ்ட்

# இறுதி நாள் ஆட்டம் மிகவும் இறுக்கத்தில்!

### ஊசலாடுகிறது வெற்றி வாய்ப்பு

கொழும்பு, ஜுலை 18

ஸிம்பாப்வேக்கு எதிராகக் கொழும்பில் நடைபெறும் ஒரே டெஸ்ட் ஆட்டத்தைக் கொண்ட தொடரின் இறுதி நாளான இன்று ஆட்டம் இறுக்கமான கட்டத்தை அடைந்திருக்கின்றது.

வெற்றி வாய்ப்பு இரண்டு பக்கங்களிலும் ஊசலாடுகின்றது.

இறுதி நாளான இன்று கைவசம் எஞ்சியுள்ள ஏழு விக்கெட்டுக்களுடன் 218 ஓட்டங்களைக் குவித்தால் இலங்கைக்கு வெற்றி. அந்த ஓட்டங்களைப் பெற முடியாத நிலையில் இலங்கையின் இரண்டாவது இன்னிஸ்ஸை முடிவுக்குக் கொண்டு வந்தால் ஸிம்பாப்வேக்கு வெற்றி – என்ற நிலைமை.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற ஸிம்பாப்வே, துடுப்பாட்டத்தைத் தேர்ந்து, முதல் இன்னிங்ஸில் 356 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்த இலங்கையினால் முதல் இன்னிங்ஸில் ஸிம்பாப்வேயைத் தாண்ட முடியவில்லை. பத்து ஓட்டங்கள் குறைவாக 346 ஓட்டங்களையே இலங்கை எடுத்தது.

நேற்று நான்காம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை முன்னெடுத்த ஸிம்பாப்வே 377 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

ஒரு கட்டத்தில் 5 விக்கெட் இழப்புக்கு 59 ஓட்டங்களுடன் தடுமாறிய ஸிம்பாப்வேயை பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் காப்பாற்றினர்.

சிக்கந்தர் ரசா – 127, மூர் – 40, எம்.என்.வலர் – 68, கிறீமர் 48 ஓட்டங்களைப் பெற்றனர்.

ரங்கன ஹேரத் 133 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், டில்ருவன் பெரேரா 95 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

388 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை, நேற்று நான்காம் நாள் ஆட்டநேர முடிவின்போது 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 170 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கருணாரட்ண 49, உபுல்தரங்க 27, குஷால் மெண்டிஸ் ஆட்டமிழக்காமல் 60, மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

இன்று ஆட்டத்தின் இறுதி நாளாகும். (உ)




# தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசும் கூட்டு எதிரணியும் இணையவேண்டும்

## அவைத்தலைவர்கள் மாநாட்டில் சி.வீ.கே.சிவஞானம் அழைப்பு







யாழ்ப்பாணம், ஜுலை 18

"தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசும் கூட்டு எதிரணியும் இணைந்து செயற்படவேண்டும். ஒத்துழைப்புக்களைத் தரவேண்டும். எமது பிரச்சினைக்கான தீர்வை இப்போதே நாம் எதிர்பார்க்கின்றோம். இந்தப் பிரச்சினையை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல நாம் விரும்பவில்லை."

– இவ்வாறு கூறினார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

கடந்த சனிக்கிழமை மாதகலுக்கு அண்மையில் உள்ள ஹொட்டல் ஒன்றில் இடம்பெற்ற மாகாண சபைகளின் அவைத் தலைவர்களின் 8 ஆவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அந்த மாநாட்டில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் உரையாற்றிய சிவஞானம் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் பேசும் மக்களுடைய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையும் என்று எதிர்பார்க்கின்ற மாகாணசபை முறைமை ஆரம்பித்து ஏறக்குறைய 30 வருடங்களாகிவிட்டன. ஆனால், தற்போதுதான், அதாவது, கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னரே – தமிழ் பேசும் மக்களுடைய பிரதேசமான வடக்கில் மாகாண சபை ஆட்சி ஏற்பட்டது.

வடக்கு மாகாணம் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டம் இந்த நாட்டினுடைய அரசியல், பொருளாதார, சமூகவியல் துறைகளில் மிகவும் தாக்கம் செலுத்துகின்ற ஒரு பிரதேசம். அன்னியர்கள் இந்த நாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்னர் இந்த நாட்டிலே மிகப் பெரிய மூன்று அரசுகள் இருந்தன.

பேராசிரியர் கே.எம்.டி சில்வாவினுடைய கருத்தின்படி அந்தக் காலத்திலே மிகப் பலமான ஓர் அரசாக யாழ்ப்பாண அரசு இருந்தது. கண்டி அரசும் அப்படி இருந்திருக்கிறது. கடைசியாக வீழ்ச்சியடைந்த அரசும் கண்டிய ரசுதான்.

பிரித்தானியர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்த பொழுது நிர்வாக வசதிக்காக 1833 இல் இந்த நாட்டை ஒரு நாடாக்கினார்கள். இன்றுவரை இந்த நாடு ஒரு நாடாக, ஒரு நிர்வாகமாக இருக்கிறது.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில், நாம் இந்த நாட்டின் பிரஜைகளாக, சகோதரர்களாக, சம உரிமையோடு எங்களுடைய மொழியையும், கலாசாரத்தையும், மதங்களையும் பாதுகாத்துக் கொண்டு, எங்களுடைய பாரம்பரிய நிலங்களில் நிர்வாக முறையை ஏற்படுத்தி அதில் வாழ்வதற்கே நாங்கள் விரும்புகின்றோம். சுயாதீன கட்டுக்கோப்புக்குள்ளே வாழ விரும்புகிறோம் என்ற கொள்கையுடைய ஒரு கட்சியின் பிரதிநிதி நான்.

நான் சார்ந்து நிற்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய பிதாமகன் மறைந்த காந்தியவாதி செல்வநாயகம். இலங்கைத் தமிழரசுக் கட்சியை 1949 டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி அமுலாக்கம் செய்த பொழுது ஒரு சமஷ்டி முறையை, ஒரு கூட்டாட்சி முறையைக் கோரினார்.

அந்த முறைமையை 1926 ஆம் ஆண்டிலேயே அமரர் பண்டாரநாயக்க பிரேரித்திருந்தார். ஆனால், தமிழ் மக்கள் அப்பொழுது அதற்கு உடன்படவில்லை.

இப்பொழுது தேசிய இனப் பிரச்சினைக்கான ஒரு தீர்வை நோக்கி நாங்கள் நகர்ந்து கொண்டிருக்கிறோம். இதில் இருக்கக் கூடிய அவைத் தலைவர்கள் மிகப் பொறுப்பானவர்கள். ஒவ்வொரு அவையை வழி நடத்துகின்றவர்கள். செல்வாக்கு உள்ளவர்கள்.

இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அரசமைப்பு மாற்ற நடைமுறையிலே, தெற்கிலுள்ள அரசியல்வாதிகள் எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, ஐக்கிய தேசியக் கட்சியாகவோ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகவோ இருந்தாலும் சரி. எந்த ஒரு கட்சிக்கும் நாங்கள் எதிராவனவர்கள் அல்ல.

ஆகையால்தான் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் 1957 ஆம் ஆண்டு மறைந்த பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவுடன் உடன்படிக்கைகைச் சாதிட்டார். அதன்பின்பு 1965 ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்கவுடன் ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டது.

எனவே, எமது பிரச்சினை இனிமேலும் தொடராதிருப்பதற்காக நாம் எல்லோரும் இணைந்து தீர்வு ஒன்றைக் காணவேண்டும். – என்றார். (ம)

# சைட்டம் மருத்துவக் கல்லூரியை முன்னேற்ற அரசு உதவிசெய்யும்

## சுகாதார அமைச்சர் ராஜித உறுதி

கொழும்பு, ஜுலை 18

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் உதவும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை அரசுடமையாக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது, அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

மருத்துவர் நெவில் பெர்னாண்டோ கஷ்டப்பட்டு உருவாக்கிய இந்த வைத்தியசாலையை சிறப்பாக பரிபாலனம் செய்வதை பார்க்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுப்போம். இந்த வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக முன்னேற்றப்படும்.

ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் இந்த வைத்தியசாலை அரசாங்க வைத்தியசாலையாக பணிகளை ஆரம்பிக்கும்.

நாட்டில் மருத்துவ பீடங்களில் வாய்ப்பு கிடைக்காத மாணவர்களுக்குக் கதவைத் திறந்து 100 மாணவர்கள் அல்ல 500 மாண வர்கள் கற்கும் வகையில் முன் னேற்ற நாங்கள் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவோம். – என்றார் அமைச்சர் ராஜித சேனாரத்ன. (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.